13ஆவது வருடத்தில்....

# விளம்பரம்™
VLAMBARAM™

☎ 416-282-8059    416-282-4978


சமூக முன்னேற்றப் பத்திரிகை    மாதமிருமுறை    இலவசம்

வெளிவருகின்றது

உலக தமிழோசை

6வது இதழ்
ஈராக் யுத்தம்
உலக பொருளாதாரம்

வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)




Direct: 416.315-9397
OFFICE: 416.321-6969
Sales Agents Welcome

நதி 13    DECEMBER 01, 2003    பாலம் 23



கனடாவின் ஒன்ராரியோவின் முதலாவது கறுப்பு இன சபாநாயகர் அல்வின் கேளின். *(Alvin Curling)*



40 வருட அரசியல் சேவையின் பின் கனடியப் பிரதமர் ஜீன் கிறிச்சியன் (Jean Chretien) பதவி விலகுகிறார்.



இந்திய மத்திய மந்திரியும் கருணாநிதியின் மருமகனுமாகிய முரசொலி மாறன் நவம்பர் 23, 2003இல் காலமானார்.



தமிழீழ சமாதானப் பேச்சுவார்த்தையில் திட சங்கற்பத்துடன் தலைவர் பிரபாகரன் இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பற்றன் தெரிவித்துள்ளார்.

## குழந்தைகளை வளர்ப்பது எப்படி?

குழந்தையை வளர்ப்பது மிகப் பெரிய கலை. ஆனாலும் இதில் சைக்கொலொஜி எனப்படும் மனப் பக்குவம் இருக்கிறதே, இதைக் கையாளுவதில் தான் ஒரு குழந்தையின் வளமான எதிர்காலம் அமையும் என்பது அறிஞர்களின் கருத்து. அந்த மனோதத்துவ இயலை கொஞ்சம் தெரிந்து கொள்ளுங்கள். குழந்தைகளை எதற்கெடுத்தாலும் திட்டவோ, அடிக்கவோ கூடாது. இரண்டையும் அடிக்கடி செய்து வந்தால், கால இடைவெளிகளில் குழந்தைகளுக்குப் பயமில்லாமல் போகும். குழந்தைகளை மகிழ்ச்சியாக விளையாட அனுமதியுங்கள். அதன் பிறகே படிக்கச் சொல்லுங்கள். மற்ற குழந்தைகளுடன் உங்கள் குழந்தை சேர்ந்து விளையாடுவதில் கவனம் தேவை. சில நல்ல பழக்க வழக்கம் இல்லாத குழந்தைகளோடு சேர அனுமதிக்காதீர்கள். "பக்கத்து வீட்டு பிள்ளையைப் பார் எவ்வளவு கெட்டிக்காரர் நீயும் இருக்கிறாயே!" என்று ஒப்பிட்டு சொல்லித் திட்டாதீர்கள். குழந்தை தன்னம்பிக்கையை இழக்கத் தொடங்கிவிடும். குழந்தையிடம் அப்பா கோபப்படும் போது அம்மா சமாதானம் செய்ய வேண்டும். அம்மா கோபப்படும் போது அப்பா சமாதானம் செய்ய வேண்டும். உங்களுக்குப் புது ஆடைகள் வாங்கினால் கண்டிப்பாக குழந்தைகளுக்கும் சேர்த்து வாங்குங்கள். குழந்தைகள் அழும் போது அழுகையை நிறுத்தச் சொல்லி அடிக்காதீர்கள். உங்கள் மீது வெறுப்பு ஏற்படும். குழந்தைகள் செய்யும் தவறைத்தான் நீங்கள் திருத்த முடியுமே தவிர குணத்தை மாற்றவே முடியாது. குழந்தைகளுக்கு ஏதாவது வாங்கிக் கொடுக்கலாம். ஆனால் கேட்ட உடனேயே வாங்கிக் கொடுப்பது தான் தப்பு. பல முக்கிய விழாக்கள் வெளியிடங்களுக்கு குழந்தைகளை அழைத்துச் செல்லுங்கள். வெளியில் பார்க்கும் விஷயங்களை குழந்தைகளுக்கு அறிமுகம் செய்யுங்கள். குழந்தைகளை கனமான தடி, மற்றப் பொருள் கொண்டு ஒரு போதும் அடிக்கக் கூடாது. ஆபத்து மட்டுமல்ல குழந்தையின் மனப் பக்குவம் மாறிவிடும்.

Since 1987
வசந்தா நகை மாளிகை
வசந்தன் - பத்மநாதன்
பத்தர்களின் கைவண்ணத்தில் தங்கத்தின் புதிய வடிவங்கள்!



TEL: 905 848 5151    FAX: 905 848 8502
OPEN 10:30AM - 8:30PM    MONDAY CLOSED
3025 HURONTARIO ST., UNIT. 103A, MISSISSAUGA

Singapore Communication
Since 1991
Unbelievable $20 package
with 150 Mins Free and
Evenings & Weekends Free
For More Info come In Store
Hurry This Incredible Offer Ends soon
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W.,Unit 17ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா -கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்



வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro.



Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
•Auto •Home •R.R.S.P •Life •Disability
•Mutual Fund •Group Insurance •Child Education •Travel & Business
416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
9.00A.M - 9.00P.M
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

## அருள் விருந்து

* அபிப்பிராய வேறுபாடு யாண்டும் உள. பிறர் அபிப்பிராயத்துக்கு அஞ்சுபவன் பெரியது எதையும் சாதக்க முடியாது.

* வாழ்க்கையில் சிக்கலான பிரச்சினை வந்துவிட்டால் நீ அதைக் குறித்து ஆழ்ந்து எண்ணியாக வேண்டும். உன்னால் சமாளிக்க முடியாத இடுக்கண் உனக்கு வருவதில்லை. நேர்மையும் உறுதிப்பாடும் கொண்டு முயலுக, வெற்றியடைவாய்.

* இயற்கை பொறுமையே வடிவெடுத்தது. வால் நட்சத்திரம் பல்லாயிரம் ஆண்டு சுழன்றோடி ஒரு வட்டமிடுகிறது. கடல் பதினாறாயிரம் வருஷம் அலை வீசிக் கரையில் உள்ள ஒரு கல்லைக் கரைக்கிறது. மனிதனுக்கு மனபரிபாகம் உண்டாக கற்பங்கள் பல பிடிக்கலாம். எல்லாம் ஒரே நாளில் வந்து அமைந்துவிட வேண்டும் என்று அவன் அவசரப்படவது எதற்காக?

## அறிவுக் குறிப்பு

* முதன்முதலில் கலைக்களஞ்சியம் *Encyclopedia* தயாரித்து வெளியிட்ட நாடு பிரான்ஸ்.

* அதிகார பூர்வமான ஆங்கில பைபிள் முதன் முதலாக கி.பி 1611 இல் அச்சிடப்பட்டது.

* மத்திய சைபீரியாவில் உள்ள பைகால் ஏரி (Baikal) தான் உலகிலேயே மிக ஆழமான ஏரியாகும். அதன் ஆழம் 2,122 மீட்டர்.

# செய்யும் தொழிலில், வெற்றி பெற



### 2004க்கான வியாபாரத் திட்டம் (Business Plan) தயாரா?



இன்னும் ஒரு மாதத்திற்குள் 2003 ஐ வழி அனுப்பி, மற்றும் ஒரு புத்தாண்டை - 2004ஐ வரவேற்கப் போகின்றோம். வியாபாரம் இப்போது எப்படி நடக்கின்றது? எல்லா வற்றையும் பார்க்க எங்கே நேரமிருக்கின்றது என்கிறீர்களா? 2003க்குத் திட்டமிட்டபடி வியாபாரம் நடந்ததா? (திட்டமே இல்லை; பிறகு, திட்டமிட்ட வியாபாரம் என்கிறீர்களா! அப்படியானால் அது உங்கள் வியாபார வளர்ச்சிக்கு உதவாது) இல்லை தொலைந்து போன வியாபாரத்தை வரும் கிறிஸ்துமஸ் சீசனிலாவது பிடித்து விடலாம் என்று போராடிக் கொண்டிருக்கிறீர்களா. எது எப்படியோ, உங்கள் கடந்த காலத்தை கணக்கெடுக்கும் போது வருங்காலக்

**பெரி. முத்துராமன்**

கனவுகளையும் நினைவில் கொள்ளுங்கள். எப்போதாவது நினைவோடு கனவு கண்டதுண்டா? ஆம் என்றால் உங்கள் கனவை ஒரு பேப்பரில் எழுதுங்கள். அதை உங்கள் குறிக்கோள் அல்லது இலக்கு (Goal) என்போம். உங்கள் இல்க்கை முடிவு செய்த பின், அதைச் சென்றடையத் திட்டமிடல் வேண்டும். திட்டத்தைச் செய லாற்றவில்லையென்றால் உயிர் அற்ற உடலை வைத்திருத்தல் போல் ஆகும். செயல் இன்றி திட்டம் பயன்தராது.

நீங்கள் ஏற்கனவே தொழில் செய்பவரா? இல்லை புதிதாகத் தொடங்கியுள்ளவரா? அல்லது தொழில் தொடங்கப் போகின்ற வரா? யாராயிருந்தாலும், வியாபாரத்திட்டம் பயன் தரும். வெற்றிக்கான வழிகாட்டியே வியாபாரதிட்டம் ஆகும்.

வியாபாரத்திட்டத்தைத் தயாரிப்பது ஒன்றும் சிரமமான காரியம் அல்ல. ஏற்கெனவே குறிப்பிட்டபடி உங்கள் குறிக்கோளை பேப்பரில் குறியுங்கள். உதாரணத்துக்கு நீங்கள் இப்படி எழுதலாம்.

குறிக்கோள்: இலாபத்தை இரட்டிப்பாக்குதல் விற்பனையைப் பெருக்குவதன் மூலம் பாராட்டுதல்கள், திட்டமிடலின் முதல் பகுதியில் வெற்றி பெற்று விட்டீர்கள்.

இப்போது நீங்கள் காரில் டொரோண்டோவிலிருந்து அட்டாவா செல்ல வேண்டும் என்று கொள்வோம். முதல் முறையாகச் செல்கின்றீர்கள். என்ன செய்வீர்கள். இணையதளத்திலோ அல்லது ஏற்கனவே சென்று வந்த நண்பர்களிடமோ போகும் வழியை விசாரித்துக் கொள்வீர்கள். போகும் வழியில் வரும் இடங்களைத் தெரிந்து கொண்டபின் போகும் சமயம் அந்தந்த இடம் வருகின்றதா என்று பார்ப்பீர்கள். சரியான பாதையில் தான் சென்று கொண்டிருக்கின்றோம் என்ற தன்னம்பிக்கையும், தைரியமும் அப்போது வருகின்றது. இல்லையா? இப்போது அதையேதான் வியாபாரத் திட்டமிடலிலும் செய்யப்போகின்றோம். வருடம் முழுவதும் இலாபத்தை இரட்டிப்பாக்க வேண்டும் என்பது நம்முடைய இறுதி இலக்கு. அப்படியானால் ஒவ்வொரு மாதமும் எவ்வளவு இலாபம் வரவேண்டும் என்று திட்டமிடல் வேண்டும். ஆம் நாம் இப்போது படிப்படியான (Step by Step) திட்டமிடலை ஆரம்பிக்க வேண்டும்.

உங்கள் தொழிலில் நீங்கள் வெற்றி பெற பல காரணிகள் தேவை. உதாரணத்துக்கு
* விற்பனையாளர்கள்
* மற்ற பணிபுரிபவர்கள்
* வாடிக்கையாளர்கள்
* உற்பத்திமுறை
* உபகரணங்கள்
* பணப்புழக்கம் (Cash Flow)
* இலாபம்

இப்போது இவை எல்லாவற்றையும் உங்கள் படிப்படியான திட்டமிடலில் சேர்த்துக் கொள்ளுங்கள். எந்தெந்த இடை இலக்கு களுக்கு எந்தெந்த காரணிகள் தேவை என்று குறித்துக் கொள்ளுங்கள். அடுத்து யோசிப்போம். உங்கள் போட்டியாளர் யார்? உங்கள் பொருள் அல்லது சேவை போட்டியாளரின் பொருள் அல்லது சேவை யிலிருந்து எவ்வாறு வேறுபட்டது? உங்கள் பொருட்களை வாங்க வாடிக்கையாளர்களை எவ்வாறு கவர்ந்திழுக்கப்போகின்றீர்கள். ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்களை எப்படித் தக்க வைத்துக் கொள்ளப் போகிறீர்கள். புதிய வாடிக்கையாளர்களை எப்படிக் கொண்டு வரப்போகிறீர்கள். உங்கள் வியாபாரச் சந்தையின் அளவு என்ன? அதில் நீங்கள் எவ்வளவு வளர்ச்சி பெறமுடியும்? அந்த வளர்ச்சிக்கு உதவும் காரணிகள் என்னென்ன? எல்லாவற்றையும் சிந்தித்து உங்கள் வியாபாரதிட்டமிடலில் சேர்த்துக் கொள்ளுங்கள். உண்மையில் விற்பனைத்திட்டம் (Marketing Plan) வியாபாரத்திட்டத்தின் ஒரு பகுதியே ஆகும்.

அடுத்த இதழில் கட்டுரை தொடரும்......

உங்கள் தொழிலில் உங்கள் நேரத்தையும் பொருளையும் சேமிக்க, இலாபத்தை அதிகரிக்க, ஆலோசனைகளுக்கும், மறு ஆலோசனைகளுக்கும் திரு. பெரி. முத்துராமனுடன் தொடர்பு கொள்ளுங்கள். இவருடைய Success Biz Solution நிறுவனத்தின் வாயிலாக பல தொழில் முனைவர்கள் பயன் அடைந்து வருகிறார்கள். நீங்களும், இன்றே பயன் அடைய இப்போதே 416 430 0623 அல்லது (C) 416 278 2026 இல் தொடர்புகொள்ளுங்கள்.

பெரி. முத்துராமன் MBA, M.Com பட்டம் பெற்றவர். இந்தியாவிலும், கனடாவிலும் சிறுதொழில் வளர்ச்சியோடு தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொண்டவர். இவருடைய கட்டுரைகள் இந்தியாவில் Financial Express, Economic Times, Hindu Businessline மற்றும் ரொறன்ரோவில் வெளிவரும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.


**கடன் தொல்லையா?**

**Call : RAJ for consultation**
**Tel: 416-835-6695**



கடன்காரர்களின் தொந்தரவா? சம்பளக் கழிப்பீடு, வழக்குகள் மற்றும் கலெக்சன் ஏஜென்சீஸிடம் இருந்து விடுதலைக்கான அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

அழையுங்கள்: ராஜ்
**Tel: 416-835-6695**





**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**

Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12
Professional Photographer - கதிர்
416 - 750 - 8118
2381 Eglinton Ave., E., Kennedy / Eglinton, Scarborough





**SAFETY TRUCKS**
**Training School Ltd.**

Training & Trucking

Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம் (9ஆம் ஆண்டு)

We Accept Welfare & Unemployment Insurance

வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.




**In Classes**
* 365 (Learning Permit)
* Lock Books
* Air Brake (Z)
* Dangerous Goods
* Border Crossing
* Defensive Driving Course

* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

16 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
(905) 793-9546 / (416) 616-5979

250 Summerlea Road, Brampton, ON

# APPLEMORE AUTOMOTIVE

**உட்புற, வெளிப்புு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்**

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**
**435 Midwest Road. Unit B5,**
**Scarborough, ON. M1P 3A6**

SPECIAL




## LARGE INDOOR PUBLIC CAR AUCTION

**EVERY WEDNESDAY EVENING**
**STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM**

### 100+ VEHICLES ON DISPLAY INDOORS

INCLUDE MANY LATE MODEL

> G.M. > FORD
> CHRYSLER > HONDA
> NISSAN > TOYOTA
> V.W., & OTHER FOREIGN & DOMESTIC VEHICLES



BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.

**WEEKLY CASH BUYERS DRAWS OPEN**
**MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM**

**FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM**

*1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ON.*

**CIA PUBLIC AUTO AUCTION & SALES**
**416 - 242 - 5052**
www.cialeasing.com

*தமிழ். கொம் Cable 20 இல்*
*சனிக்கிழமை காலை 10:30 - 11:00வரை*
*ஒளிபரப்பில் அண்மையில் வெளிவந்து*
*வெற்றிநடை போட்ட மதிவாசன் இயக்கத்தில்*
*எஸ். கே. தீசனின் கலகலப்பு நகைச்சுவைச்*
*சித்தரம் வாரா வாரம் பார்த்து மகிழலாம்.*

## YARLCAN
## STEAM CLEANING

- **DUCT CLEANING**
- **CARPET CLEANING**

உங்கள் சகலவிதமான
Cleaning
தேவைகளுக்கும்
அழையுங்கள்-




மோகன்: (905) 887-7436
Cell: (416) 721-9709

வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாக தரவும்.

## சரியா? தப்பா? சரியாதப்பா....

ஆசிரியர்: உலகிலே இத்தாலியர்களும் கட்டடக்கலையில் சிறந்தவர்கள்.

மாணவன்: அப்ப ஏன் பைசா கோபுரத்தை வடிவாகக் கட்டேல்லை. அது வருடா வருடம் சரியுதாம்.



இன்னொரு மாணவன்: நல்ல கட்டடக் கலைஞர் வேலை தேடி வெளிநாடுகளுக்கு போயிருப்பினம்.

ஆசிரியர்: ???

* * * * * * * *

ஆசிரியர்: பசுப்பாலிருந்து எங்களுக்கு என்ன கிடைக்கிறது.

மாணவர்: காச்சிய பாலை உறைய விட்டால் தயிர்வரும். தயிரைக்கடைய நெய் வரும், மோர்வரும்.



இன்னொரு மாணவர்: பாலைக்குடித்தால் கொலஸ்ரோல் வரும்.

ஆசிரியர்: ???

Neelam silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்
'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

# நீலம் சில்க்

பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும்
"நீலம் சில்க்"



- *SONALIKA PURE SILK*
- *JARDHOSHI SATIN & CREPE SILK*
- *JAPAN CRYSTAL SILK*
- *JAIPUR CRYSTAL SILK*
- *VASUNTHARA NETWORK CREPE*

**T.P: 416-778-7455**
**Fax: 416-778-8484**
1453 GERRAD STREET, EAST
(INDIAN BAZZAR)

**T.P: 416-759-2002**
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)

வீடு வாங்க, விற்க



சசி செல்வரட்ணம்




Sasi Chelvaratnam
Sales Representative

Cell: (416) 725-1125

Bus: (416) 321-6969 Fax: (416) 321-6963
Email: chelvaratnamsasi@hotmail.com

**HomeLife GTA** Realty Inc., Real Estate Broker
1711 McCowan Rd., Suite 206,
Scarborough, ON. M1S 3Y3.




**Markham/16th Ave**
**4 Bedrooms**
**3 Washrooms**
**Asking $369,000**



**Neilson/Sheppard**
**2 bedrooms**
**Asking $139,000**



**King/W Of Bathurst**
Commercial/Retail Store W/Apt/Office

Store & Apartment Is Retail, 2 Fl./3 Fl., Two Bedroom Apt. With 1X4 Pcs Washroom, Townhouse Price, Good Value. 2 Fridges, 2 Stoves.

Asking $449,000



**Neilson/Sheppard**
**3 Bedrooms**
**Asking $159,900**



**Markham/Sheppard**
**1+1 Bedrooms**
**Asking $133,900**



**Greenin/Kinngscollege**
**3 Bedrooms**
**3 Washrooms**
**Asking $294900**



**Yonge/Carlton**

**2 Bedrooms/2 washrooms**

**Immaculate Condition! 1 Year Old Broadloom.Nice View, High Floor**

**Asking only $279,000**

# சாதாரண மனிதனின் சிந்தனையிலிருந்து.



ஈழத்தமிழர்களும் இழித்தவாயர்களா?



இந்த அன்னையின் வயிற்றில் ஏன் பிறந்தேன் என்று எண்ணக்கூடிய வகையில் ஓர் உயிர் ஏங்கி கவலைப்படும் அளவிற்கு ஒரு தாயானவள் கொடுமைக்காரியாக இருப்பாளாயின் நல்ல தாயை எண்ணி ஏங்கும் அந்த உயிரின் ஏக்கம் எமக்கு இலகுவாக புரிந்து விடும். ஆனால் பெற்ற தாயையும், பிறந்த பிறப்பையும் எவராலும் மாற்றி அமைக்க முடியாது என்பதும் எமக்கு நன்றாக தெரிந்தும் கவலைப்பட்டே வாழ்க்கையை சீரழிக்க வேண்டுமா? பெற்ற தாய் நல்லவளாக மாறுவாளா, மாட்டாளா என்ற கேள்விக்கு பதில் என்ன?

பெரும்பான்மை ஈழத்தமிழர்கள் ஏன் இவ்வளவு குறுகிய மனப்பான்மையுடன், சுயநலமே வாழ்க்கையாகவும், மற்றவர்களுக்கு வால்பிடித்தல், பல்லுக்காட்டுதல், அடிவருடுதல் என்று வாழ்வதுடன் மட்டுமல்லாமல், தனது இனத்தை சேர்ந்தவர்களுக்கு நன்மை வரக்கூடிய வகையில் சற்றும் சிந்திக்காமல் வரக்கூடியதையும் வரவிடாத வகையில் உள்ளதையும் கெடுப்பவர்களாக நடந்து கொள்கிறார்கள். மானம், ரோசம், வெட்கம் இல்லாத வகையில் வாழ்த்தப்படுகின்றனர். இவர்கள் நல்லவர்களாக மாறமாட்டார்களா? ஏன் ஈழத்தமிழர்களில் ஒருவனாக பிறந்தோம் என்று எண்ணும் வகையில் நடந்து கொள்கிறார்கள்? தமிழன் என்ற இனத்தில் பிறப்பவர்களில் பெரும்பான்மையானவர் அப்படிப்பட்டவர்கள் தானோ! என்ற ஐயம் வருகின்ற வேளையில் அதனை ஆமோதிக்கும் வகையில் சில மாதங்களுக்கு முன் தேவி வார இதழில் வெளிவந்த தமிழக சட்டசபை செய்தி ஒன்று கண்ணில் தட்டுப்பட்டது. யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்.

தமிழன் இளிச்சவாயனா?

கடந்த 28ஆம் திகதி, தமிழக சட்டமன்றத்தில் பேசிய ஓசூர் தொகுதி உறுப்பினர் கோபிநாத், (இவர் ஒரு காங்கிரஸ் ஏம்.எல். ஏ. இவரது தாய் மொழி, பேச்சு மொழி இரண்டும் தெலுங்குதான்) இவர் தெலுங்கு, கன்னடம் ஆகிய இருமொழிகளிலும் தமிழக சட்டமன்றத்தில் பேசினார். இதுவே, ஆந்திர சட்டமன்றத்தில் யாராவது தமிழில் பேசமுடியுமா? கர்நாடகாவில் சில தமிழ் ஏம்.எல்.ஏ க்கள் மேலும் பலர் இருக்கின்றர். அவர்கள் யாராவது கர்நாடக சட்டமன்றத்தில் தமிழில் பேச முடியுமா? பேசினால் கன்னடன் சும்மா இருப்பானா?

தெலுங்கிலே பேசிய உறுப்பினர் கோபிநாத்க்கு முதல்வர் ஜெயலலிதா தெலுங்கிலேயே பதில் அளிக்கிறார். ஆனால், கன்னட முதல்வரோ ஆந்திர முதல்வரோ தமிழில் பேசுவார்களா? இது ஒருபக்கம் இருக்கட்டும்.

தெலுங்குக்காரரான கோபிநாத் பேசும்போது, "எங்கள் பகுதியில் மாணவர்கள் படிப்பதும் எழுதுவதும் தெலுங்கில்தான். ஆனால், தேர்வுக்கான கேள்வித்தாள் மட்டும் ஆங்கிலத்தில் தரப்படுகிறது. இதனை உடனே மாற்ற வேண்டும்" என்கிறார்.

அமைச்சர் செம்மலையும் உடனே அதற்குச் சம்மதம் தருகிறார். "கேள்வித்தாள் தெலுங்கிலேயே இருக்க புரட்சித் தலைவி உத்தரவுவிட்டு விட்டார்" என்கிறார் செம்மலை.

ஆனால், ஆந்திராவில் தமிழர்கள் தமிழில் படிக்கவும் எழுதவும் முடிகிறதா? ஆந்திராவில் இருந்த எத்தனை தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் ஆந்திர அரசுகளால் திட்டமிட்டு அழிக்கப்பட்டன தெரியுமா?

ஆனால், தமிழ்நாட்டில் தெலுங்கிலேயே எழுதப்பட்டிருக்கும் தெலுங்கர்களுக்கு கேள்வித்தாள் மட்டும் தெலுங்கில் இல்லாததே ஒரு பெரிய குறையாகப் படுகிறது.
அதே நேரம் இதற்கேற்றபடி, ஆந்திராவில் தமிழ்ப்பள்ளிக்களைக் காக்க அல்லது வளர்க்க ஆந்திர அரசு உதவ வேண்டும் என்று அதே கோபிநாத் ஆந்திர அரசுக்கு கோரிக்கை வைப்பாரா?

அதுமட்டுமல்ல. தமிழ்நாட்டில் தெலுங்கு அகாடமி அமைக்க வேண்டும் என்று அதே கோபிநாத் தமிழக சட்டசபையில் தெலுங்கிலேயே பேசி கோரிக்கை வைக்கிறார். அதற்கு தெலுங்கிலேயே பதில் சொன்ன தமிழக முதல்வர் "உங்கள் கோரிக்கையைப் பரிசீலிப்போம்" என்கிறார்.

ஜெயலலிதா அப்படி தெலுங்கில் பேசியதும், அ.தி.மு.க.வின் அனைத்து உறுப்பினர்களும் கைதட்டிப் பாராட்டுகின்றர். கோபிநாத் முகம் மலர்கிறார். இன்னொரு தெலுங்கு எம்.எல்ஏ. வான முரளிதரன் ஆகா...ஓகோ..என்று புகழ்கிறார்.

சரிதான்.

"தமிழ்நாட்டில் தெலுங்கு அகாடமி வைக்க தமிழக அரசு சம்மதித்து விட்டது. எனவே, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்களே! நீங்கள் உடனே ஆந்திராவில் தமிழ் அகாடமி அமைக்க ஏற்பாடு செய்யுங்கள்". என்று இந்த தெலுங்கு ஏம்.எல்.ஏ.க்களான கோபிநாத்தோ முரளிதரனோ அல்லது வேறுதெலுங்கர்களோ ஆந்திர அரசுக்கு கோரிக்கை வைக்க தயாரா?

"நீங்கள் ஆந்திராவில் தமிழ் அகாடமி வைத்தால் தான், நாங்கள் தமிழ்நாட்டில் தெலுங்கு அகாடமி வைப்போம்" என்று நம் முதல்வர் நிபந்தனை விதித்தால் கூட அது நியாயம் தானே.

உண்மையில் என்ன செய்ய வேண்டும்?
ஆந்திராவில் தமிழ் அகாடமி அமைக்க சந்திரபாபு நாயுடு ஒத்துக்கொண்டால் தவிர, தமிழ்நாட்டில் தெலுங்கு அகாடமி அமைக்கக் கூடாது.

இதுதான், தமிழக அரசின் முடிவாக இருக்க வேண்டும்.

முதல்வரின் சார்பில் தமிழ்நாட்டில் உள்ள தெலுங்கு மக்களுக்கும் ஆந்திர முதல்வர் சந்திரபாபுநாயுடுக்கும் மேற்படி கோரிக்கை நாமே வைக்கிறோம்.

அது மட்டுமல்ல, தமிழனை எதிரியாக எண்ணும் கன்னடமக்களின் கன்னட மொழியில், தமிழக சட்டசபையில் பேசுவதைத் தடை செய்ய வேண்டும், தமிழறிஞரான சபாநாயகர் காளிமுத்து.

எதிராளி நடந்து கொள்வதற்கு ஏற்பத்தானே, நாமும் நடந்து கொள்ள முடியும். தமிழன்மட்டும் என்ன, இளிச்சவாயனா?

நல்லது, தமிழகத்து செய்தியையும் வாசித்தறிந்தோம். தமிழர்கள் வெட்கம், மானம், சூடு, சுறணை உள்ளவர்களாக மாறுவார்களா? என்று ஆதங்கப்படுபவர்களுக்கு அந்த செய்தி வேதனையை இன்னும் அதிகரிக்கச் செய்து இருக்கும். தன்மானம் என்றால் கிலோ என்ன விலை எனும் அளவிற்கு வாழும் ஈழத்தமிழர்கள் பலருக்கு மற்றைய இனத்தினருக்கு அடிவருடுவதும், வால்பிடிப்பதும், பல்லிளிப்பதும் சரிதான், வெட்கம், மானம், ரோசமற்று குலத்தை கெடுக்கும் கோடாரிக் காம்புகளாக வாழ்வதில் தவறில்லை என்று அந்த செய்தி மன ஆறுதலை கொடுத்து இருக்கும். ஈழத்தமிழர்களும் இளித்த வாயர்களா? இல்லை என்பதும் ஆம் என்பதும் உங்கள் கைளில். நிரூபியுங்கள்.

சிந்திப்போம் செயற்படுவோம்

சிந்தனை தொடரும்......

பரம் ஜி.
ஒரு சாதாரணமனிதன்


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

**ரவி நடராஜா**

**Accident & Traffic Ticket**

(14 Years Insurance Claims Experience)

* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும். * உரிய இழப்பீடுகள் * மற்றைய இழப்பீடுகள் * விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்



(416) 245-6555
2095 Weston Road, Suite 203, Toronto, ON
(416) 755-2801
2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON

RENOVATIONS

KITCHEN CABINET,
BASEMENT RENOVATION
மற்றும் சகல திருத்த வேலைகளுக்கு
அழையுங்கள்





**416-757-3109**




வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!
பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு
வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜி
பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில்
முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்

**Param Gnana**
Sales Representative
HomeLife GTA
Realty Inc.

www. themathuram.com

Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)





# நாமும் நமது இல்லமும் 177

# Hot Water

வெளியிலிருந்து வீட்டிற்கு சாதாரண தண்ணீரே அனுப்பப்படுகிறது. பொதுவாக இந்தத்தண்ணீரே வீட்டிற்குள் செம்பால் உருவாக்கப்பட்ட குழாய்களினால் (Copper pipe, 1/2" அல்லது 3/4") கொண்டு வரப்படும். இந்த தண்ணீர் குளிராகவே காணப்படும். எமது பழக்கத்தில் கூறப் போனால் பச்சைத்தண்ணீராகக் காணப் படும். மிகவும் குளிராக இருக்கும்.

வீட்டிற்குள் கொண்டு வரப்படும் தண்ணீர் தேவைகளிற்கும், இடத்திற்கும் ஏற்றாற் போல வெவ்வேறு கிளைக் குழாய்களால் கொண்டுசெல்லப்படும். வீட்டிற்குள் கொண்டுவரப்படும் குளிர்ந்த தண்ணீர் எமது தேவைகளிற்காக சூடாக்கப்படுகிறது. சூடாக்கப்படும் இந்த தண்ணீர் Hot Water எனக் கூறப்படும்.

ராஜா மகேந்திரன்

இவ்வாறு தண்ணீரை சூடாக்கும் கருவி அல்லது உபகரணத்தை Hot water Heater என்று அழைக்கப்படுகின்றது. இத் தண்ணீரைச் சேர்க்கும் உபகரணம் Hot water Tank ஆகும். இந்த Tank இற்குள் வரும் குளிர்ந்த தண்ணீர் வாயுவினால் (Gas) இனால் சூடாக்கப்படுகிறது. சூடாக்கப்பட்ட தண்ணீர் குழாய்களினால் வீட்டின் மற்ற பாகங்களிற்கு அனுப்பப்படுகின்றது.


சாதாரணமாக Hot water Tank வாடகைக்காக வீட்டில் வைத்திருக்கப்படும். இந்த தொட்டி (Tank) இன் கனவளவு (Capacity) வெவ்வேறு அளவில் தயாரிக்கப்படுகிறது. அதன் அளவிற்கு ஏற்ப மாதாந்தம் வாடகை அறவிடப்படும். இந்த வாடகைப்பணம் வீட்டிற்காக பாவிக்கப்படும். Gas இற்குரிய பணத்துடன் சேர்த்து ஒன்றாக அறவிடப்படுகின்றது.


சூடாக்கப்பட்ட தண்ணீர், தொட்டியில் (Tank) வைத்திருக்கும்போது வெப்பநிலை குறையும். இதனால் மீண்டும் சூடாக்குவதற்கு மேலதிக Gas பாவிக்கப்படும். இதனால் மேலதிக செலவு ஏற்படும். அனேகமான Hot water Tank வீட்டின் கீழ்ப்பகுதியில் (Basement) வைக்கப்படும். எனவே இந்த Tank உகந்த Insulation Jacke இனால் சுற்றிவைப்பதனால் சூடாக்கப்பட்ட தண்ணீர் வெப்பம் இழப்பதனைத் குறைக்கலாம். பணத்தையும் சேமிக்கலாம். மேலும் இந்த Jacket ஐப் பாவிக்கும் போது கவனமாக போடப்படல் வேண்டும். THERMOSTAT போன்றவற்றை மறைத்தல் கூடாது. மற்றும் Air உள்ளே போகும் பகுதியை கவனமாக கையாளுதல் வேண்டும்.


வெப்பநிலையைக் கையாளுதல்
வெப்பநிலையை குறைத்தலினால் ENERGY பாவிக்கும் அளவையும் குறைக்கமுடியும்.

சாதாரண கணக்கின்படி
இருவரைக்கொண்ட குடும்பத்தின் மாதாந்த செலவு $18.75 - 26.75
நால்வரைக் கொண்ட குடும்பதின் மாதாந்த செலவு $28.13 - 39.32

| Setting | Temperature |
|---|---|
| Hot | 65c |
| warm | 49-52c |
| Vacation | 33c |






**Raja M. Mahendran**, P. Eng.
Broker/Owner
Office - 416- 321-6969
Direct: 416 315-9397
Email: raja@mahendran.ca

| Interest | Rate |
|---|---|
| 5 YrsMortgage | 5.15% |
| Prime rate | 4.50% |
| Bank rate | 2.75% |



**AVERAGE RESIDENTIAL MORTGAGE LENDING RATE - 5 YEAR***

(Per cent / *en pourcentage*)

| Year / *année* | Jan / *jan* | Feb / *fév* | Mar / *mar* | Apr / *avr* | May / *mai* | Jun / *jun* | Jul / *jul* | Aug / *aoû* | Sep / *sep* | Oct / *oct* | Nov / *nov* | Dec / *déc* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1984 | 12.55 | 12.52 | 12.82 | 13.51 | 14.26 | 14.53 | 14.96 | 14.45 | 13.99 | 13.72 | 13.25 | 12.74 |
| 1985 | 12.44 | 12.57 | 13.43 | 12.77 | 12.38 | 11.89 | 11.75 | 11.77 | 11.85 | 11.96 | 11.75 | 11.61 |
| 1986 | 11.67 | 11.94 | 11.66 | 11.12 | 10.60 | 10.87 | 11.06 | 11.00 | 11.10 | 11.25 | 11.25 | 11.17 |
| 1987 | 10.85 | 10.46 | 10.20 | 10.39 | 11.04 | 11.26 | 11.26 | 11.49 | 11.72 | 11.97 | 11.49 | 11.56 |
| 1988 | 11.73 | 11.49 | 11.08 | 11.04 | 11.29 | 11.41 | 11.40 | 11.92 | 12.16 | 11.79 | 11.78 | 12.13 |
| 1989 | 12.24 | 12.23 | 12.41 | 12.72 | 12.29 | 11.93 | 11.85 | 11.76 | 11.75 | 11.75 | 11.75 | 11.95 |
| 1990 | 12.01 | 12.42 | 12.92 | 13.67 | 14.21 | 14.03 | 13.97 | 13.56 | 13.40 | 13.21 | 13.04 | 12.49 |
| 1991 | 12.13 | 11.58 | 11.45 | 11.27 | 11.23 | 11.24 | 11.31 | 11.47 | 11.38 | 10.84 | 10.14 | 9.84 |
| 1992 | 9.71 | 9.68 | 10.06 | 10.37 | 10.14 | 9.72 | 9.26 | 8.72 | 8.54 | 9.23 | 9.33 | 9.48 |
| 1993 | 9.47 | 9.44 | 8.97 | 8.89 | 8.88 | 8.86 | 8.68 | 8.58 | 8.57 | 8.55 | 7.84 | 7.71 |
| 1994 | 7.33 | 7.20 | 7.89 | 9.43 | 9.48 | 9.80 | 10.69 | 10.33 | 10.01 | 9.84 | 9.85 | 10.25 |
| 1995 | 10.60 | 10.48 | 9.93 | 9.66 | 8.98 | 8.67 | 8.54 | 8.94 | 8.95 | 8.75 | 8.66 | 8.46 |
| 1996 | 8.02 | 7.79 | 8.16 | 8.48 | 8.47 | 8.48 | 8.48 | 8.01 | 7.94 | 7.50 | 7.01 | 6.94 |
| 1997 | 7.14 | 7.12 | 7.06 | 7.56 | 7.46 | 7.22 | 6.98 | 7.00 | 6.96 | 6.73 | 6.69 | 6.90 |
| 1998 | 6.90 | 6.84 | 6.84 | 6.79 | 6.92 | 6.90 | 6.90 | 7.08 | 7.32 | 6.73 | 6.94 | 6.69 |
| 1999 | 6.72 | 6.79 | 7.03 | 6.71 | 6.99 | 7.35 | 7.42 | 7.80 | 7.67 | 7.90 | 8.13 | 8.13 |
| 2000 | 8.34 | 8.43 | 8.24 | 8.23 | 8.50 | 8.34 | 8.18 | 8.08 | 8.08 | 8.08 | 8.04 | 7.81 |
| 2001 | 7.58 | 7.52 | 7.19 | 7.22 | 7.38 | 7.47 | 7.46 | 7.39 | 7.03 | 6.74 | 6.51 | 6.64 |
| 2002 | 6.62 | 6.59 | 6.80 | 7.00 | 7.00 | 6.98 | 6.90 | 6.61 | 6.49 | 6.50 | 6.47 | 6.39 |

# 'நோய் நீக்கி'

## வீட்டு வைத்தியம் (Self Heal)

8 ஆம் பக்கத்தொடர்ச்சி

(8) ஜீவதத்துவக்கணிப்பு முறை வைத்தியம் (Biofeedback Therapy). இதன் பிரகாரம் எமது உடம்பில் ஏற்படும் இறுக்க நிலையையும், நாடி ஓட்டம், வியர்வை இவற்றை அறிவதற்கு ஒரு கருவி உடம்புடன் இணக்கப்பட்டு அதை அவதானித்து எமது உடம்பிலுள்ள உறுப்புக்களில் ஏற்படும் அசௌகரியங் களைச் சரிசெய்வதாகும். உதாரணத்திற்கு எமது கைவிரலில் ஒரு வெப்பமானியை (Thermometer) இணைத்து, அதனுடன் மின் ஓசைக்கருவி Electronic sound meter இணைக்கபட்டால் அது குறிப்பிட்ட ஒரு வெப்பம் வந்ததும் அந்தக்கருவி ஓசையிடும், அதன்பின் நாம் அந்த வெப்பத்தை எமது கற்பனையால் குறைத்தால் அந்த ஓசை நின்றுவிடும். அந்த விரலில் ஐஸ் படுவதாகவும் அவ்விடம் குளிர் நிலைக்கு வருவதாகவும் கற்பனை செய்தால் அந்த விரலில் உஷ்ணம் விரைவாகக்குறைந்து விடும். இது மேல் நாட்டில் மிகவும் பிரபல்யமாகி இந்த வைத்தியத்தில் தேர்ச்சிபெற்ற பல ஜீவதத்துவக் கணிப்பு வைத்தியர்கள் பல நோய்களையும் குணப்படுத்துகிறார்கள். இந்த முறை எமது பண்டைய சித்தர்களும் யோகிகளும் செயற்படுத்திய முறைதான், அவர்கள் தமது இருதயத்தை நிறுத்துவதையும், நாடியை ஓடாமல் செய்வதையும், பலநாட்கள் தமது உடம்பை கட்டுப்படுத்தி செயலிழக்கச் செய்து பின் செயற்பட வைப்பதைக கண்டிருப்பீர்கள், கேழ்விப்பட்டிருப்பீர்கள். இவைகள் இந்த சுயஜீவ அதிகார(தன் உறுப்பு அடக்கு) முறைகள்தான், ஆனால் அதை நாம் விருத்தி செய்ய தவறி விட்டோம். எனவே அது எம்மவர் மத்தியில் அருகிவிட்டது. வெளிநாட்டவர் விருத்திசெய்து கருவியும் உருவாக்கி எமக்குக்கற்றுத் தருகிறார்கள். கற்றுக்கொள்வோம், அறிவு எங்கிருந்து வந்தாலும் ஏற்கப்பட வேண்டிய ஒன்றுதானே. கற்றுப்பயனடைவோம்.

Dr. Mohan - (416) 298-7537
Dr. Para - (416) 291-3022

### தெரிந்து கொள்ளுங்கள்

* செஞ்சிலுவைச் சங்கத்தை ஸ்தாபித்தவர் - ஹென்றி டிரன்ட்.
* சாரணர் இயக்கத்தை ஸ்தாபித்தவர் - பேடன் பவுல்
* தென்துருவத்தை அடைந்த முதல் மனிதர் - அமுத்னெ
* வடதுருவத்தை அடைந்த முதல் மனிதர் - ராபர்ட் பியரி.

# விளையாட்டுத் தகவல்கள் - 136




ஏ.டி.பி. மாஸ்டர்ஸ் கோப்பை: ரோஜர் பெடரர் சாம்பியன். இறுதிப் போட்டியில் அகாசி தோல்வி ஹவுஸ்டன், நவம்பர் 18, 03

ஏ.டி.பி. மாஸ்டர்ஸ் கோப்பை டென்னிஸ் போட்டிக்கான சாம்பியன் பட்டத்தை சுவிட்சாலாந்தின் ரோஜர் பெடரர் வென்றுள்ளார்.

**எஸ். கணேஷ்**

தரவரிசையில் முதல் 8 இடங்களில் இருக்கும் வீரர்களுக்கான, இவ்வருட கடைசி போட்டியான ஏ.டி.பி. மாஸ்டர் கோப்பையை டென்னிஸ் போட்டிகள் அமெரிக்காவில் உள்ள ஹவுஸ்டனில் நடைபெற்றன. இந்த போட்டிக்கான சாம்பியன் பட்டத்தை விம்பிள்டன் சாம்பியனான சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் தட்டிச் சென்றார்.




இறுதிப் போட்டியில் பெடரர் 6-3, 6-0, 6-4 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் ஆண்ட்ரூ அகாசியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார்.

ஏறக்குறைய இரண்டரை மணி நேரம் மழையால் தடைபட்ட இந்த போட்டியில் 88 நிமிடங்களில் பெடரர் வெற்றி பெற்றார். இறுதிப் போட்டியில் மிகச் சிறப்பாக விளையாடியது யார்? என்பதை ஸ்கோரை பார்த்தாலே நன்றாகப் புரியும். இந்த போட்டியில் பெடரர் ஒரு பிரேக் பாயிண்டை கூட எதிர் கொள்ளவில்லை.

இந்த வெற்றியானது இந்த வருடத்தில் பெடரின் 7வது சாம்பியன் பட்டமாகும்.

இந்த வெற்றி குறித்து பெடரர் கூறுகையில் "விம்பிள்டன் பட்டம் உட்பட இந்த வருடத்தில் 7 பட்டங்களை வென்றது என்பது மிகப் பெரிய விஷயமாகும். இதை என்னால் நம்பவே முடியவில்லை என்று கூறினார்.


பெடரர், அகாசி இருவருக்கும் இடையேயான இறுதிப்போட்டியில் மேகமூட்டம் காணப்பட்ட நிலையில் முதல் செட்டை பெடரர் வென்றார். லேசான மழைத் தூறல்களுக்கு மத்தியில் 2வது செட் துவங்கியது. 0 - 30 என்ற நிலையில் 2வது செட்டின் ஆரம்பத்தில் பெடரர் முன்னிலையில் இருந்தபோது கடும்மழை பெய்து ஆட்டம் தடைபட்டது.

இரண்டரை மணி நேரத்திற்குப் பின்னர் போட்டி மீண்டும் ஆரம்பமாகியது. அதன்பிறகு இரண்டு செட்களையும் எளிதாக வென்று சாம்பியன் பட்டத்தை பெடரர் கைப்பற்றினார். இந்த போட்டியில் வெற்றிபெற்றதற்காக பெடரருக்கு சுமார் ஏழரை கோடி ரூபாய் பரிசுத்தொகையாக கிடைத்தது. ரன்னர்-அப் பட்டம் வென்ற அகாசிக்கு சுமார் மூன்றரை கோடி ரூபாய் பரிசுத் தொகையாக கிடைத்தது.

கடந்த 25 வருடங்களில் ஏ.டி.பி. மாஸ்டர்ஸ் கோப்பையில் விளையாடும் அதிக வயதுடைய வீரர் அகாசி ஆவார். வருடக் கடைசியில் நடைபெறும் ஏ.டி.பி. மாஸ்டர்டஸ் கோப்பை போட்டியில் 1990 ஆம் ஆண்டு மட்டுமே அகாசி வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. 1998 முதல் 2000 ஆம் வரை ஏ.டி.பி மாஸ்டர்ஸ் கோப்பையில் அகாசி தோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கது. டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற பெருமையை பெறும் முனைப்புடன் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளரான முரளிதரன் இருக்கிறார்.

சாதனை படைக்க வேண்டும், அந்த சாதனையை யாரும் முறியடிக்காத விதம் படைக்க வேண்டும் என்பதே முரளிதரனின் விருப்பமாக உள்ளது. குறிப்பாக டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைக்க வேண்டும் என்ற துடிப்பு முரளிதரனிடம் அதிகமாக உள்ளது.

31 வயதான முரளிதரன் இதுவரை 459 டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்களில் 3வது இடத்தில் முரளிதரன் இருக்கிறார். 519 விக்கெட்டுக்களுடன் மே.இ.தீவுகளின் வால்ஷ் முதலிடத்திலும், 491 விக்கெட்டுகளுடன் அவுஸ்திரேலியாவின் ஷேன் வார்னே 2 ஆம் இடத்திலும் உள்ளனர். வால்ஸ் கிரிக்கெட் விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். வார்னே ஒருவருட கால தடையில் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்துக்கு எதிரான தொடர், அவுஸ்திலியாவுக்கு எதிராக அவுஸ்திரேலியாவிலும், இலங்கையிலும் நடைபெறவிருக்கும் தொடர்கள் இவற்றில் இலங்கை அணியின் சார்பாக அதிக விக்கெட்டுகளை வீழ்த்தும் வாய்ப்பில் முரளிதரன் இருக்கிறார். எனவே அடுத்த ஆண்டு இதே நேரத்தில் ஏறக்குறைய உலக சாதனையை முரளிதரன் சமன் செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2008 ஆம் ஆண்டு கிரிக்கெட் விளையாட்டில் இருந்து முரளிதரன் ஓய்வு பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்குள் எவ்வளவு விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைக்க முடியுமோ அவ்வளவு விக்கெட்டுக்களை வீழ்த்தி விடவேண்டும் என்பது தான் முரளிதரனின் இலக்காக உள்ளது. இது குறித்து முரளிதரன் அளித்துள்ள பேட்டியில் குறிப்பிட்டிருப்பதாவது, "500 விக்கெட்டுக் கள்... அதன் பிறகு 520... அதற்கடுத்ததாக ஓய்வு பெறுவதற்கு முன்னர் 650 விக்கெட்டுகளை வீழ்த்தினால் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைவேன். எப்படி இருந்தாலும் வால்ஷின் சாதனையை முறியடிக்க வேண்டும் என்பது எனது ஆசை. இன்னும் 5 வருடகாலத்திற்கு விளையாடினேன் என்றால் 650 விக்கெட்டுகள் இலக்கை என்னால் எட்ட முடியும் என நம்புகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக முக்கியமான ஒன்று உள்ளது. எதிர்வரும் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை வெல்ல வேண்டும்" என்று கூறியுள்ளார். இதற்கு முன்பு இங்கிலாந்துக்கு எதிராக விளையாடிய கடைசி இரண்டு தொடர்களில் இலங்கை தோல்வி அடைந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. இங்கிலாந்தில் நடைபெற்ற தொடரில் 2-0 என்ற நிலையிலும், 2000-01 இல் ஹீசைன் தலைமையிலான இங்கிலாந்து அணியிடம் இலங்கை அணி 2-1 என்ற நிலையில் சொந்த மண்ணில் தோல்வி அடைந்துள்ளது. இது குறித்து முரளிதரன் கூறுகையில், "கடந்த முறை இங்கிலாந்து அணி இலங்கை வந்திருந்த போது தோர்ப் கச் சிறப்பாக விளையாடி எங்களுடைய சவால்களை சமாளித்தார். ஆனால் இந்த முறை நிச்சயம் நான் சிறப்பாக பந்து வீசி சாதிப்பேன் இது உறுதி. இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் நிறைய விக்கெட்டுகளை வீழ்த்தும் உறுதியுடன் இருக்கிறேன். கடந்த முறை இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் தொடரில் எங்களுக்கு சரிவு ஏற்பட்டது. ஆனால், இந்த முறை டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள் இரண்டிலும் தொடரை கைப்பற்ற வேண்டும்" என்று கூறினார். எதிர்வரும் தொடருக்கான இங்கிலாந்து அணியின் தேர்வு சிறப்பானதாக இருப்பதாக குறிப்பிட்ட முரளீதரன் இதுகுறித்துக் கூறுகையில் உலகின் தலைசிறந்த அணிகளுள் ஒன்றான தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரில் இங்கிலாந்து அணி சிறப்பாக விளையாடியுள்ளது. எனவே தற்போதைய இங்கிலாந்து அணி சிறந்த நிலையில் உள்ளது" என்று கூறினார்.




# 'நோய் நீக்கி'
## வீட்டு வைத்தியம் (Self Heal)

### மேல்நாட்டு வைத்தியம் (Orthodox Western treatment).

மேல்நாட்டு வைத்தியம்; இது 'ஹிப்போகிறற்ஸ்' (Hippocrates) என்னும் வைத்திய நிபுணர் அறிமுகம் செய்த 'அலோபதி (Allopatby) வைத்தியமுறை. இதன்பிரகாரம் நோய்க்கு எதிரான விதிமுறைகளைக் கையாண்டு நோய் தோற்றுவிக்கும் கிருமிகளை அழிக்க வல்ல கிருமிகொல்லிகள் (Antibiotic, Antifungus) போன்ற மருந்து பாவித்து நோயைக் குணப்படுத்துதலாகும். இதன் பிரகாரம் பல கழிவுப்பொருட்கள், பாதிக்கப்பட்ட உறுப்புக் களின் தசைகள் இவற்றை ஆய்வுகூடத்தில் பரீட்சித்து அவற்றில் இருக்கும் கிருமிகள், ஏற்பட்ட மாற்றங்கள் அவதானித்து அதற்கு ஏற்ற மருந்தைக் கொடுத்து நோயைக் குணப்படுத்துதல்.

### குறிநிலைத்துளை அல்லது குறிநிலை அழுத்து வைத்தியம் (Acupuncture and Acupressure)



சீன நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாக நோய்களைக் குணப்படுத்தப்பாவனையில் இருந்த 'குறி' நிலைத்துளை (Acupuncture) குறிநிலை அழுத்து (Acupressure) ஆகிய வைத்திய முறை களாகும். இவற்றின் பிரகாரம் ஒரு ஜீவனின் உடம்பில் சக்தி எங்கும் வியாபித்து நிற்கும். இதில் மாற்றங்கள் ஏற்பட்டால் இந்தச் சக்தி சஞ் சரிக்கும் 14 மின்வாய்க்கால்களில் பேதங் கள் ஏற்பட்டு நோய் தோன்றும். அவற்றை நாடியைப் பரீட்சித்து பேதத்தைச்சரி செய் ததும் நோய் குணமாகிவிடும் என்பதாம்.

### சமன சிகிச்சை என்னும் 'ஹோமியோபதி' வைத்தியம் (Homeopathy).

18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் டாக்டர் சாமுவல் ஹன்மன் (Dr.Samuel Hahnmann) என்னும் வைத்திய நிபுணரால் கண்டுபிடிக்கப்பட்ட சமன சிகிச்சை முறை என்னும் 'ஹோமியோபதி (Homeophthy) என்னும் முறையும் உலகில் பல்வேறு பாகங்களிலும் தற்போது பிரபல்யமானது. இதன்பிரகாரம் ஒற்றுமையுள்ள சக்திகள் சில வீரிய பேதத்துடன் ஒன்றை ஒன்று நீக்கும் என்னும் தத்துவமாகும். இதை ஆங்கிலத்தில் ",Similia Similibus Curanta" எனப்படும் முறையாகும். இதன் பிரகாரம் ஒரேகுணங்குறிகள் உள்ள மருந்துக்காரணி அதே குணங்கறிகளைத் தோன்றச் செய்யவல்ல நோய்க் காரணியை மிகக் குறைந்த அளவில் ஆனால் வீரியப்படுத்திக் கொடுத்தால் அது அந்த நோய்க்காரணியை அகற்றிவிடும் ஆற்றல் வாய்ந்தது என்பதாம்.

### உயிர் உப்புக்கள் வைத்தியம் (Bio-Chemic Treatments).

இந்த வைத்தியம் ஜேர்மனியைச் சேர்ந்த டாக்டர் ஹஸ்ஸர் (Dr. Scbussler) என்ப வரால் கண்டு பிடிக்கப்பட்ட முறையாகும். இதன் பிரகாரம் மனித உடம்பில் உள்ள உயிர் உப்புக்கள் உடம்பிலுள்ள கலன்களின் செய லிழப்பால் உடம்பிலுள்ள செறிவில் (Concentration) ஏற்றுக் கொள்ளும் தன்மையை இழந்து விடும் காரணமாகும். ஆகவே இந்தக்கலன்கள் உணவிலிருந்து உயிர் உப்பை உறிஞ்சும் சக்தியை இழந்துவிடுகின்றன. அந்த உப்புக்களை உடம்பிலுள்ள செறிவில் சிலநாட்கள் கொடுத்தால் உடம்பிலுள்ள கலன்கள் நல்ல நிலைக்கு வந்துவிடும். அதன்பின் அவை உணவிலிருந்து குறித்த உப்புக்களை உறிஞ்ச ஆரம்பத்ததும் நோயும் குணமாகிவிடும் என்பதாம்.

(6) உடம்பில் உயிர் உப்புக்கள் யாவும் ஆறாவது தசம வீரியத்தில் (6x) இருக்கிறது என்ற உண்மையும் டாக்டர் ஷஸ்ஸர் கண்டுபிடித்தார். இந்த 12 உயிர் உப்புக்களும் உடம்பில் குறைவதால் தோற்றும் நோய்களின் அறிகுறிகளை அறிந்து எந்த உயிர் உப்பு குறைந்து விட்டதெனத் தெரிந்து அதைக் கொடுத்தால் நோய் குணமாகிவிடும். இது வீட்டில் செய்யக்கூடிய சுலபமான வைத்தியம். இந்த உப்புக்கள் தசம வீரியத்தில் இருப்பதால் பக்கவிளைவு ஏதும் ஏற்படாது. இந்த 12 உப்புக் களானவன (1) கல்சியம் பொஸ்பேற் (Calcium Phosphate) (2) கல்சியம் ஸல்பேற் (Calcium Sulpbate) (3) கல்சியம் ப்ளுறேற் (Calcium Flourate) (4) நேற்றம் முறியாரிக்கம் என்னும் கறி உப்பு (Natrum Muriaticum). (5) நேற்றம் பொஸ்பேற் (Natrum Phosphate) (6) நேற்றம் ஸல்ப்பேற் (Natrum Sulphuricum) (7) மக்னீசியம் பொஸ்பேற் (Magnesium Phosphate) (8) காலி பொஸ்பேற் (Kaliuum Phospbate) (9) காலி முறியாரிக்கம் (Kalium Muriaticum) (10) காலி ஸல்பேற்(Kalium Sulpbate) (11)பெறம்பொஸ்பேற் (Ferrum Phospbate) இரும்புச்சத்து (12) ஸைசீலியா(silicea) 'பிழிற்' (Flit) என்னும் மண் சத்துமாகும். இவை அத்தனையும் 6 தசம(6x) வீரியத்திலேயே உடம்பில் உள்ளன. இவை குறைந்தால் இரத்தசோகை, எலும்பு முறிதல், நரம்புத்தழர்ச்சி, வீரிய இழப்பு, நோய் எதிர்ப்புச் சக்தி குறைதல், ஞாபகசக்திகுறைதல் போன்ற நோய்கள் தோன்றும் ஆபத்து ஏற்படும். இவற்றை அதே செறிவில் (6x) குறிப்பிட்ட உப்புக்களைக் கொடுத்து நோயைக் குணப்படுத்தலாம் என்பது இதன் தத்துவம்.

நீர் வைத்தியம் (Hydrotherapy) இதன்பிரகாரம் சூடான நீரையும் குளிரான நீரையும் மாறி மாறி தேகத்தில் ஊற்றுவதால் தேகத்திலுள்ள இரத்த நாளங்களும் நாடிகளும் விரிந்தும் சுருங்கியும் உறுப்புக்களுக்கு புத்துணர்வு கொடுத்து நோய்களைக்குணப்படுத்தும் என்பதாம். ஓரிடத்திற்கு சூடான ஒத்தட மும் குளிரான ஒத்தடமும் கொடுத்தும் இதைச்செயற்படுத்தலாம். சூடான நீரில் நீந்துவதும் இந்த வைத்திய முறையாகும்.

### வாஷனை வைத்தியம் (Aromatic Therapy)

இதன்பிரகாரம் பல வாஷனைத் திரவியங்களை முகரக்கொடுத்து பல நோய்களை மாற்றுவதாகும். இது தற்போது மேல்நாடுகளிலும் ஜப்பானிலும் மிகப்பிரபல்யமாகி வருகிறது. மல்லிகை (Jasmine) லவெண்டர் (Lavender), றோஸ் எண்ணை(Rose oil), சந்தன எண்ணை (Sandalwood oil) சமோமிலா (Chammomila oil), தேயிலை எண்ணை (Tea oil) போன்ற பல எண்ணைகள் எமது முளையில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தி பல நோய்களை தீர்க்க வல்லவை எனக் கண்டறிந்து அவற்றை பாவித்து பல நோய்களை குணப்படுத்துகிறார்கள்.

பிரதிபிம்ப அல்லது மண்டல அழுத்து வைத்தியம் (**Reflexology**).

இந்த முறைப்படி உயிரினங்களின் உள்ளங்கால், உள்ளங்கைகளில் உடம்பிலுள்ள சகல உறுப்புக்களின் பிரதிபிம்ப நிலையங்களும் இருக்கின்றன எனக் கண்டறிந்து அவற்றை அழுத்தி உள் உறுப்புக்களை நல்ல நிலைக்கு கொண்டு வந்து நோய்களை தீர்க்கலாம் என்னும் தத்துவம்.

### தியான சிகிச்சை (Meditation)

இதன் பிரகாரம் மனதை ஒரு உருவத்திலோ அல்லது ஒரு சுலோகத்திலோ மனதை ஈடுபடுத்தி மனத்தை பலப்படுத்தி நோய் களை நீக்கலாம் என்பதே இதன் தத்துவ மாகும். மயக்கு உறக்கமுறை சிகிச்சை (Hypnotherapy). இதன்பிரகாரம் ஒரு நோயாளியை மனோதத்துவரீதியில் மயக்கு நிலைக்கு கொண்டுவந்து அந்த மயக்க உறக்கநிலையில் இருப்பவருக்கு சில அறிவுரை கூறி பல நோய்களைக் குணப்படுத்தும் முறை இதுவாகும்.

### பார்வை வைத்தியமுறை (Visualization Therapy)

இதன் பிரகாரம் பாதிக்கப்பட்ட உறுப்பை மனக்கண்முன் நிறுத்தி எமது மனத்தால் அந்த உறுப்புக்கு நல்ல இரத்தம் ஓடுகிறது!. அதில் தேங்கிய அசுத்தங்கள் தாமாகவே நீங்குகின்றன. அதில் தேங்கியிருக்கும் விஷக் கிருமிகள் எமது வெண்குருதியால் அழிக்கப்பட்டு அவ்விடத்திற்கு சுத்த இரத்தம் சேர்ந்து நோய் நீங்குகிறது என்று எண்ணுவது. இது தற்போது மேல் நாடுகளில் மிகவும் பிரபல்யமாகிவருகிறது. நல்ல பலனையும் கண்டுள்ளனர். தீராத பல புற்றுநோய் (cancer) போன்ற நோய்களைத்தீர்ப்பதற்கு இது பெரிதும் உதவுதாக டாக்டர். அஞ்சால ஸ்மித் (Dr.Angela Smyth.M.D) தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்த வைத்தியமுறை எமது நாட்டிலும் அதிகமாக நாட்டுப்புறங்களிலும் பாவனையில் இருந்தது. எம்மவர் பலரால் மேல் நாட்டு வைத்திய மோகத்தில் பரிகசிக்கப்பட்டதை நாம் அறிவோம். இதை அங்கு 'பார்வை' வைத்தியம் என்பார்கள். ஆனால் இன்று மேல் நாட்டில் பிரபல்யமாவதால் எம்மவரும் ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும். யோக சிகிச்சை (Yoga-Therapy) எமது சித்தர்களாலும் யோகிகளாலும் அறிமுகப் படுத்தப்பட்ட சிகிச்சை முறை. இதுவும் தற்போது மேல்நாடுகளில் மிகப்பிரபல்யமாகி பல தீராத நோய்களைத் தீர்ப்பதற்கு உதவுகிறது. இதன் பிரகாரம் சில உடற்பயிற்சிகளைச்செய்து அது உடம் பிலுள்ள நாடியல்லா கோழங்களை (Endocrine Glands) ஊக்குவித்து, அவற்றை நல்ல நிலைக்கு வரச்செய்து, நோயைக் குணப்படுத்தும் சிகிச்சை முறையாகும். இதை எம் நாட்டவர்கள், இந்தப்பயிற்ச்சிகள் ஏதோ பிரமச்சாரி களுக்கும் சித்தர், யோகிளுக்குமே தகுதியானது என்று பயந்து பழக அஞ்சினர் எம்மவர். ஆனால் இதுவும் தற்போது மேல் நாட்டில் பெரிதும் மதித்துப் பரீட்சிக்கப்படு கிறது எனவே நாமும் பயின்று பலனடையாலாம் தானே!

கைறோப்றக்ரிக் வைத்தியம் (Chiropractic Therapy). இதன்பிரகாரம் உடம்பின் முதுகு எலும்பும் முள்ளந்தண்டும் விரிவடைதால் பலநோய் தோன்றுகிறதென்றும் அவற்றை முள்ளந்தண்டையும் முதுகு எலும்பையும் சில முனைவுகள் மூலம் (Manipulations) டிம் என்பதாம். இதை இந்த வைத்தியத்தில் தேர்ச்சி பெற்ற 'கைறோபக்ரிக்' வைத்தியர்கள் சரிசெய்வதால் அந்த நோய்கள் நீங்கி அவயவங்களும் செயற் பாடும் சுயநிலைக்கு வந்து(Chiropractors) வைத்தியத்தைச்செய்வார்கள்.

- தொடர்ச்சி 6ஆம் பக்கம்



டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், PH.D
வவுனியா, இலங்கை

mhc
MOHAN HOMEOPATHIC CLINIC



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- ALLERGIES
- SKIN PROBLEM
- SEXUAL PROBLEMS
- RESPIRATORY PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- FOOT PROBLEM
- TREAT WITH MASSAGE THERAPY

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | |
|---|---|
| Cough | Flu |
| Depression | Anxiety |
| Asthma | Tonsillitis |
| Gout | Arthritis |
| P.M.S | Leucorrhea |
| Migraines | Hair Loss |
| Diabetes | Cystitis |
| Cancer | Prostatitis |
| Obesity Hemorrhoids | |
| Stumatitis | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022


5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# மெய்ஞான விஞ்ஞானிகள்

## நா. க. சிவராமலிங்கம்

மனிதனை தெய்வ நிலைக்கு உயர்த்தும் 'உலைகள்" திருக்கோயில்களாகும். அந்த உலைகள் உறுதியுடன் உயரிய பணியை செய்வதற்கு உறுதுணையாக இருப்பவர்கள் இறைவனது திருமேனியை முப்போதும் தீண்டும் அந்தணப் பெரு மக்கள் ஆவர். மனிதனை புடம்போட்ட பொன்போல் ஆக்கி புனித நிலைக்கு உணர்த்துபவர்கள் அந்தணர்கள் ஆவர். இறைவனுக்கும் ஆன்மாக்கும் இடையில் இறுக்கமான தொடர்பை ஏற்படுத்தி அவர்களது வாழ்க்கையை தூய்மைப் படுத்தி சுகப்படுத்தி இறுதியில் இறையருளில் சங்கமிக்கச் செய்பவர்கள் அவர்கள். சுத்தம் சுகாதாரம், சாத்வீக உணர்வு, சத்தியம், அறிவு வேட்கை, ஆன்மீக ஆய்வுகள், யோகப்பயிற்சிகள் என்ற வாழ்க்கை முறையை வகுத்துக் கொண்டவர்கள் அவர்கள். இத்தகைய வாழ்க்கை முறையில் வழிவழிவந்த தலைமுறையினரே கோயில் அர்ச்சகராக, குருக்களாக விளங்கினார். எனவே ஆத்ம நற்கதிக்காக ஒரு முக்கியமான இடத்தில் இருந்து ஆன்மீகப் பணிபுரியும் அர்ச்சகர் கள் மதிப்புடன் நடத்தப்பட வேண்டும். கோயிலின் தலைமை அர்ச்சகர் ஒரு ரிஷி போல இருக்க வேண்டும். மலை யாளத்துக் கோயில்களில் நம்பூதிரிகள் தெய்வகைங்கரியத்திற்கு வந்ததும் உடல், உளம் செயல்கள் எல்லாவற்றை யும் பரம சுத்தமாக்கிக் கொண்டு விடுகிறார்கள். நெருப்புமாதிரி இருக் கிறார்கள். கிறித்தவக் கோயில்களில் தலைமைப் பாதிரியார் என்ன நிலை வகிக்கின்றாரோ அதே நிலை சைவக் கோயில்களிலும் பேணப்படவேண்டும். குருக்கள்மார் தோற்றத்தாலும், பொலி வாலும், அறிவாலும், ஞானத்தினாலும் மதிப்பாலும் மரியாதையும் பெற வேண்டும்.

யார் வேண்டுமானாலும் அர்ச்சகர் ஆகலாம் என்ற நியதி இருப்பதனால் தான் அர்சகர்களில் புனிதம் கெட்டுவிடுகின்றது. ஆகையினால் அர்ச்சகர் கல்லூரி ஒன்று பண்பாட்டு முறையில் அமைக்கப்பட்டு அதில் பயிற்சி பெறுபவயே கோயில் அர்ச்சகராக நியமிக்கப்பட்டால் அவர்களது ஒழுக்க சீலம் பாதுகாக்கப்படும். முன்பு வேத ஆகமப் பாடசாலைகளில் குருக்கள்மார் உருவாக்கப்பட்டார்கள். குருக்கள்



மாருக்கு குருகுலப் பயிற்சி அவசியம். இன்று இந்நிலை மாறி திடீர் குருக்களாக உருப் பெறுகிறார்கள் இது சைவச-மயத்தின் சாபக் கேடு எனலாம்.

தமிழ்நாட்டிலும், ஏனைய இடங்களிலும் கோயில்கள் ஒரு நிர்வாகக் கட்டமைப்பின் கீழேயே இயங்கிவந்தன, இயங்கி வருகின்றன. இதனால் குருக்கள்மார் நிர்வாகியின் அறிவுறுத்தலின் படியே செய்லாற்ற வேண்டியுள்ளது. எனவே கோயில் தலைமைக் குருக்கள் நீண்டநாட்கள் பணியில் இருப்பதில்லை. அடிக்கடி மாற்றப்படுகின்றனர். இதனால் அடியார் கள் தொகை குறைவடைவதும் அனர்த்தங்கள் ஏற்படுத்துவதும் உண்டு. தமிழீழத்தில் குருக்கள்மார் கோயில் நிர்வாகிகள் வழக்கில் பெருந்தொகைப் பணம் செலவிடப்பட்டதை நினைவில் கொள்ளத்தக்கது.

தமிழ் சமூகம் தெய்வநிலையினை அடையும் வழிகளைக் காண்பதற்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்ட சிலரை உருவாக்கியது. அப்படியானவர்களை இறைவனுக்கு நிகரானவர்களாகவே போற்றினார்கள். எனவே சைவ சமயத்தின் பெருமையினைக் காப்பதற்கு கோயில் குருக்கள்மார் தமது நிலையி னின்று தளராமல் தகைமையுடன் விளங்கவேண்டும்.

கனடாவைப் பொறுத்தமட்டில் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் இங்கு வசிக்கிறார்கள். பதினெட்டிற்கு மேற்பட்ட கோயில்கள் தோன்றியுள்ளன. அதிகமாக எல்லாக் கோயில்களும் தனிப்பட்டோரால் உருவாக்கப்பட்டனவே யாகும். பக்தியை வளர்க்கவா பணம் சம்பாதிக்கவா இக்கோயில்கள் உரு வாக்கப்பட்டவை என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. அனேகமான கோயில்களில் ஆகம விதிப்படி அமையாதவை. அப்பாண்மென்டிலேயே அமைந்துள்ளன. கோயில் அமைப்பு விதிப்படி கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மாகமண்டபம், ஸ்நபனமண்டபம், அலங்காரமண்டபம், சபாமண்டபம் என்ற நியதியின்படி அமையாதவை. கோயிலு க்கு தலவிருட்சம் தீர்த்தம் என்பன முக்கியமானாவை. இடர்பாடுகள் இருந்தாலும் கோயில் என்ற பெயரில் இந்து மதத்தினரின் மனத்தை நோகச்செய்யக்கூடாது.

இங்குள்ள கோயில்களில் அதிகமானவை குருக்கள்மாரலேயே அமைக்கப்பட்டவை யாகும். எனவே கோயிலின் நிர்வாகி, குருக்கள், எடுபிடியாள் எல்லாம் அவர் தான். சட்டதிட்டங்களும் அவர் வகுத்தனவேயாம். எதிலும் ஏகபோக உரிமை என்பது தன்முனைப்பிற்கு வழிவகுத்துவிடும். தமது உத்திகளினால் சித்தி பெறும் மார்க்கம் உளது என்று பக்தர்களை அழைக்க வித்தைகள் புரிகிறார்கள்.

பிராமணர் அல்லாத மற்றவர்கள் கோயில் குருக்களாக இருக்கக்கூடாதா என்ற கேள்வி அண்மைக்காலத்தில் கேட்கப் பட்டு வருகின்றது. அப்படியான விதிவிலக்கு இல்லை. நமது தெய்வம் தூய்மை சுத்தம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டது. நம்முடைய மதத்திலே தான் கோயில்களில் அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. மூன்று வேளையும் அர்ச்சகர்கள் குளிக்கிறார்கள். சுவாமிக்கு அபிஷேகங் கள் நடைபெறுகின்றன. புதிய ஆடைகள் அணிவிக்கப்படுகின்றன.

குளிப்பது உடலைச் சுத்தப்படுத்துகின்றது. சைவ உணவு சிந்தனையை சுத்தப்படுத்துகின்றது. நல்ல சிந்தனையும் செயலும் ஒழுக்கத்தை கட்டிக்காக்க உதவுகின்றது. தெய்வபயம் வாழ்க்கை யில் நீதியையும் தர்மத்தையும் தோற்று விக்கின்றது. இப்படிப்பட்ட வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் எல்லோருமே அர்ச்சகர்களாக இருக்கலாம்.

எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்வோர் யாவரும் அந்தணர்கள் என்கின்றார் செந்நாப்போதர்.

"அந்தணர் என்போர் அறவோர்
மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலால்"

> உடலையும் ஆன்மாவையும் ஒன்றாகவே வைத்திரு.


# New Kalyani Catering & Take out

NOW

292 Markham Road, Scarborough, ON

416-261-9774



**கொத்துரொட்டி (ஆடு அல்லது கோழி)**
தண்டூரி Chicken
முட்டைச் சம்பல்
றோல்ஸ்
Fruit Salad with Ice Cream

**Singapore Noodles (Chicken Shrimp)**
தண்டூரி Chicken
கட்லட்
Fruit Salad with Ice Cream

**New Kalyani யின் படையப்பா Noodles**
(MixMeat, Beef, Pork, Chicken)
தண்டூரி Chicken
Fish கட்லட்
Fruit Salad with Ice Cream

**Megoring Noodles (Chicken & Shrimp)**
முட்டைச் சம்பல்
தண்டூரி Chicken
Patties
Fruit Salad with Ice Cream

**ரொட்டி**
Mala Chicken
றோல்ஸ்
டெவில் Beef
Fruit Salad with ice cream

**Fried Rice (Sea Food)**
Beef with Canadian Brocoli
சில்லி Chicken
அன்னாசிப்புடிங்

**பிட்டுக் Combo**
இஞ்சிச் சம்பல்
மீன் பொரியல்
பருப்பு
நண்டு or இறால் or கணவாய்
வட்டிலப்பம்

**மரக்கறிச் சாப்பாடு**
முருங்கைக்காய் கூட்டு, உ. கிழங்கு மசாலா,
பருப்பு, பூசணி + மரவள்ளி பால்கறி
கோவாவறை, அச்சாறு, பப்படம், ரசம்,
வடை, பாயாசம்.

**புரியாணிச் சோறு கோழி or ஆடு**
றோல்ஸ்
முட்டை
தக்காளி, சின்னவெங்காயம் சலாட்
அன்னாசிப்புடிங்

**இடியப்ப புரியாணி (Vegetable)**
கத்தரிப்பிரட்டல்
பருப்பு
உ.கிழங்கு + தக்காளி குழம்பு
அன்னாசிப் புடிங்

நகைச்சுவைத் தொடர்....



# ராசம்மா ராச்சியம்



98



இலங்கையின் நேரம் மாலை 5:40
ஐரோப்பாவில் நேரம் மாலை12:40
கனடா...அமெரிக்காவில் நேரம் மாலை 6:40

**கண்டங்கள் வேறு...**



ஆனால்...எண்ணங்கள் ஒன்று.




எல்லோர் பார்வையும், கேள்வியும் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர் உரையை...எதிர்பார்த்திருக்கின்றது.

மாவீரர் நாள் உரையிலிருந்து...
பல சகாப்பதங்களாக பாராமுகம் காட்டிவந்த....
உலகம்.... இன்று தனது முழுக்கவனத்தையும் எமது...போராட்டத்தின் மீது திருப்பியுள்ளது.



* * * * * *

போருக்கு... ஓய்வு ஏற்பட்ட போதும் தமிழ் மக்களுக்கு இன்றும் ஓய்வு கிட்டவில்லை.
-மாவீரர் நாள் உரையிலிருந்து



மாவீரர் நாள் உரையை தொலைக்காட்சிகளிலும் வானொலிகளிலும் உலகளாவிய ரீதியில்

**புலிகளுக்கு தடைபோட்ட நாடுகள்**
**உரையை எடைபோட்டு பார்க்க தவறவில்லை.**

எழுச்சி விழா..எழுச்சிப் பாடல்கள் உலகர் வீட்டில்...பிறிம்லி மீனா ஆட்டிலறி அன்னம்மா.. ராசம்மா, ரூபி...ரூபன் எல்லாரும் ஒன்றாக இருந்து மாவீரர் தின நிகழ்வுகளை ரிவி, றேடியோக்களில் கேட்டதும், நினைவுகள் பிறந்த மண்ணைச் சுற்றி வந்தது.....



அங்கை ஆமிக்கும் பொலீசுக்கும் பயந்து ஊரையும் உறவையும் விட்டு வந்து கடைசியில் இன்று பிள்ளையளை வளர்க்க தாய் தகப்பன் படும்பாடு...என இழுத்தா..செல்லம்மா....



டே..கெயரிலை, என்ரை மகள் பிள்ளைகளை விட்டு 2, 3 நாள் வேலையாலை வர பிந்திப் போச்சு 10, 15 டொலர் கட்டச் சொல்லிப்போட்டினம்.



ஆனா..பிள்ளைகள் வளந்து பள்ளிக்கூடத்தாலை பிந்தி வந்தா...ஏன் லேற் எண்டு கேட்டா...பிள்ளையளுக்கு கோபம் வரும்... பொலீசைக் கூப்பிட்டு உங்களைப் பிடித்துக்கொடுத்துவிடுவன், வீட்டை விட்டு போவன் எண்டு வெருட்டினம் என ஆவேசத்துடன் கத்தினா...ஆட்டிலறி அன்னம்மா....



இப்ப...பள்ளிக்கூடங்களை...கொக்கோ...கோலா..... கண்ட நிண்ட சாப்பாடு...விக்கக்கூடாது.
கல்வி அமைச்சர் சொல்லியிருக்கிறாராம்
ஏன் பள்ளிக்கூட வளவுக்குள்ளை... சிகரெட் குடிக்கினம் கஞ்சா..அடிக்கினம் குடிவகை...பாவிக்கினம் அது அவருடைய காதிலை எட்டவில்லையாக்கும்.





முதல் அதை நிப்பாட்ட சொல்லுங்கோவன் என அடுக்கினா..செல்லம்மா பாராளுமன்றம் போகாமலே வீட்டிலேயே பாராளுமன்றம் போல் வாதாடுவதை ரூபனும் ரூபியும் ரசித்திக்கொண்டு இருந்தனர்.

உலகண்ணை பிள்ளைகளை..பேசக்கூடாது, அடிக்கக்கூடாது எண்டு எங்களுக்கு சட்டம். வாத்திமாரும் பொலீசும் பிள்ளையள் தாய்தேப்பனோடு எப்படி பேசவேணும் அவையை மதிக்கவேணும் எண்டு ஏன் சொல்லிக்கொடுக்கினமில்லை.



ஆனா ஒரு விசயம் நீங்கள் கவனிக்கவில்லை. முந்தி சின்னப்பிள்ளைகள் எண்டு பெரிய தண்டனை கொடுக்காமல் தனிக்கோட்டிலை அவையளை விசாரிச்சதாம் ஆனால் இப்ப இந்த வருசம் வரவர குற்றம் சின்னப்பிள்ளைகளின்ரை குற்றம் கூடிக்கொண்டு போகுது.



சின்னப்பிள்ளைகளின்ரை குற்றமென்றாலும் பெரிய கோட்டிலை விசாரிக்கவேணுமாம் என்று சொல்லுகிறார் பெரிய பொலீஸ் சீவ்.


சொன்னால் காணாது. அதை செய்தால் தான் கன தாய்தகப்பன் சீமானுக்கு பூபோட்டுக்கும்புடுவினம்.

*- கலகலப்பு தீசன்*


15 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 147



**இட-வல**
1. செவி வழியாக கதைகள் வரும் முறை
4. பூமி (வல-இட)
5. காயச் செய்
7. பழமை
9. சில பிராணிகளின் குட்டி (வல-இட)
10. பயிற்சி (வல-இட)
11. மிகுதியை குறிக்கும் இடைச் சொல்
12. வறண்டு இறுகிய நிலம்

**மேல்-கீழ்**
1. சூடம்
2. தீவட்டி
3. ஆ
4. நோக்கு (கீழ்-மேல்)
6. கறை
8. சோலை
9. வியாசம் (கீழ்-மேல்)
10. விருந்தினன்
11. தந்தை (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உ | று | ப் | பி | ன | ர் | க | ள் |
| ல் | ஆ | | டி | | | ள் | தே |
| லா | | க | | ணி | | ள | |
| ச | ம | ர் | ப் | ப | ண | ம் | |
| ம் | | ம் | | | | | கூ |
| | வீ | ண் | செ | ல | வு | | ட் |
| ளி | | | | | | ஓ | டு |
| க | ல் | லா | க் | கா | ர | ம் | |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் Dece. 28, 2003க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

146இல் வெற்றி பெற்றோர்
1) A. Arulnithy, Donmills
2) R. Segar, Scarborough


* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
*அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
*வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

(416) 267-0408 731 - 733 kennedy Road [Ken-Mark Plaza]

# J DAYCARE



* மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
* ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
* காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை
* மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை
* சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

**1 Hr. - $3.00**
**Day - $15.00**
**Week - $60.00**

**தினசரி நடவடிக்கைகள்** * உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

தொடர்புகளுக்கு:
Mrs.S.J. சௌந்தரநாயகம்

#7 Birchcrest Court (Finch / Warden) **416-502-3033**

# ACTION HONDA

*"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"*



**புதிய பழைய HONDA**
**வாகனங்களை ஈழத்தமிழ் மகன்**
**சோதீஸ்**
**இடம் பெறும்போது**

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.




THIS MONTH SPECIAL

November 30, 2003 வரையும் பழைய வாகனம் வாங்குவீர்களானால் ஆயுட் காலத்திற்கும் **Oil change** இலவசமாக செய்து கொடுக்கப்படும்.

**416-704-1179**

**அலுவலக நேரம்**
**Mon, Fri, Sat: 9 am - 6 pm**
**Tues, Wed: 12 noon - 9 pm**

**4334 Kingston Rd, Scarborough**



APTAC

# LEARNING CENTRE

Excellent Tutoring for J.K.G to Gr. 12 Students by qualified and experienced tutors.

*English * ESL * Science * Algebra
* Geometry * Finite Math * Calculus * Biology
* Physics * Chemistry *French *Science
Projects (Including Project Work for University Students)

- Well-organized small group classes
- personal attention to each student
- Homework help and regular lessons
- Gr.3, 6 & 10 EQAO Test Preparation
- Superb 'enjoy and learn' atmosphere for J.K.G to Gr. 2 Students
- Tried-out tutors for all the grades
- Special discounted fees for deserving Students

Contact: Mr. Nallaratnam Masilamani
TESl Cert. (Canada)

Tel: 647-439-3175 / 416-268-8561
Fax: 416-297-4878
5637 Finch Ave. E., Unit 1 & 1A, (Finch & Tapscott)
Office Hours: 10:00AM - 9:00PM

APTAC

# Arts Academy

## அனுபவமும் தகுதியும் வாய்ந்த ஆசிரியர்களின் இசை, நடன வகுப்புக்கள்

- பரதநாட்டியம்: தமிழகத்தில் புகழ் பெற்ற நடன பள்ளியான "கலைக்காவிரி"யின் முன்னாள் ஆசிரியையும், ரொரன்ரோ-கனடா பரதகலாலயத்தின் முதன்மைஆசிரியையுமான திருமதி. ரேணுகா விக்கினேஸ்வரன் அவர்களின் பரதநாட்டிய வகுப்புக்கள்.
- இசை: அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறையில் பட்டம் பெற்று, பல வருடங்கள் வாய்ப்பாட்டு ஆசிரியராக கடமையாற்றிப் பெயர் பெற்ற சங்கீத பூசணம் திருமதி. நளினி குகசீலன் அவர்களின் பண்ணிசை - வாய்ப்பாட்டு சங்கீத வகுப்புக்கள்.
- வயலின்: திருமதி. அருந்தா ஜெயநாதன் (இலண்டன், இலங்கை, கனடா ஆகிய இடங்களில் சிறப்புகள் பெற்ற அனுபவம் மிக்க ஆசிரியை அவர்களின் வகுப்புக்கள்)
- மிருதங்கம்: திரு. ஆனந்தராஜா பிரேமானந்த்
  தபேலா: (திருச்சி கலைக்காவிரியின் பெயர் பெற்ற விரிவுரையாளர் திரு. சந்திரசேகரிடம் பயின்று சாதனைகள் பல புரிந்தவர்) அவர்களின் வகுப்புக்கள்

- Keyboard வகுப்புகள் நவம்பர் 1ஆம் திகதி ஆரம்பமாகும்.
- இலவச தமிழ் மொழி வகுப்புக்கள்

தொடர்பு: திரு. நல்லரட்ணம் மாசிலாமணி

தொலைபேசி: 647-439-3175/416-268-8561
தொலைநகல்: 416-297-4878
5637 Finch Ave. E., Unit 1 & 1A, (Finch & Tapscott)
அலுவலக நேரம்: காலை 10:00 - மாலை 9:00

கனடாவின் தலைநகர் ஒட்டவாவில்

# " நம்பிக்கை நாணயம் நந்தா "

வீடு வாங்க விற்க
மற்றும் இலவச ஆலோசனை பெற்றுக்கொள்வதற்கும்

முதல் முறையாக வீடு வேண்டுபவர்களுக்கு,
அவர்களுக்கு உள்ள சலுகைகளை அறிந்து கொள்வதற்கும்

உங்கள் வீட்டின் தற்போதைய விலையை அறிந்து கொள்வதற்கும்

குறைந்த வட்டி வீதத்தில் Mortgage செய்து கொள்வதற்கும்

COLDWELL BANKER
Coldwell Banker Coburn Realty

அழையுங்கள் நந்தா



Nantha Aiyadurai, B.Eng
Sales Representative
Office : 613-823-7555
Cell : 613-866 9931
Toll Free : 1 800 472 6512
E-mail: nantha-aiyadurai@coldwellbanker.ca



# தூறல்

## IN THE NAME OF BUDDHA புத்தரின் பெயரால்



படத்திற்கான சிறப்பு:
இலங்கை இந்திய அரசுகளால் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்திய அரச படைக்கு எதிராக (IPKF) இந்தியாவில் படம் பிடிக்கப்பட்டுள்ளது. நடிகர்கள், தொழில்நுட்பக்கலைஞர்கள், இயக்குநர் உட்பட்ட பெரும்பாலானவர்கள் இந்தியப் பிரசைகள்.

நடிகர்கள்: Shiju (Siva), சோனியா (கீதா), (வைத்தியர்) ஜெயசூரியா, அனுராதா (கீதாவின் தாய்), அமீட் (Mikar) மற்றும் Pamela, சிறீஜா, புஷ்பா, பிரியங்கா, கல்யாணி, கினேஷ், பத்மசிறி, ஜோதிலாய் மற்றும் பலர்.
திரைக் கதை - நெறியாள்கை - ராஜேஷ் Touch River
தயாரிப்பு - K. சண்முகதாஸ், சாய்ஜோர்ஜ்
கதை - சாய் ஜோர்ஜ்
வசனம் - C.K. ராஜா சந்திரசேகர்
எடிட்டிங் - ரஞ்சன் ஏபிரகாம்
இசை - ராஜாமணி
கமரா - நாகரட்டினம் நெயின் யோசப்

ஈழத்தமிழர் தவிர்ந்த ஏனையோரால் எடுக்கப்பட்ட இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இதுவரை வெளிவந்த திரைப்படங்கள் சில

* நந்தா - (இலங்கை பெண்அகதி - ஒரு பாத்திரம்)
* தென்னாலி - (கதாநாயகன் - தமிழ் அகதி - போரினால் பாதிக்கப்பட்டவன்)
* காற்றுக்கென்ன வேலி
* கன்னத்தில் முத்தமிட்டால்
* Terrorist
* புன்னகை மன்னன் (ரேவதி)
* Death in a Fullmoon Day - பௌர்ணமி நாளில் ஒரு மரணம் (சிங்களம் - ஏற்கனவே விளம்பரத்தில் விமர்சனம் வெளிவந்துள்ளது. முருகன் புத்தகசாலையில் வீடியோ பிரதியைப் பெற்றுக் கொள்ளலாம்.
* சரோஜா (சிங்களம்)
* மற்றும் சில சிங்களப் படங்கள் (நெறியாள்கை - நியாஸ், அசோக ஹந்தகம்)
* துருப் பிடித்த மனசு (Tele film) (சில காட்சிகள்)



இவற்றில் காற்றுக்கென்னவேலி, பௌர்ணமி நாளில் ஒரு மரணம் ஆகிய இரு படங்கள் தவிர்ந்த ஏனையவை (கன்னத்தில் முத்தமிட்டால், புன்னகை மன்னன், Terrorist) இனப்பிரச்சினை பற்றிய தவறான கண்ணோட்டத்திலேயே எடுக்கப்பட்டவை. பௌர்ணமி நாளில் ஒரு மரணம் - இலங்கை அரசால் தடை செய்யப்பட்டது. அதேபோல் காற்றுக்கென்ன வேலி, பல தடைகளை தாண்டியே வெளிவந்தது.

சில வருடங்களுக்கு முன்பு Terrorist (பயங்கரவாதி) வட அமெரிக்க நகரங்களில் பெரும் வெற்றி பெற்றது. கனடாவில் Eye, Now போன்ற பத்திரிகைகள் உட்பட பல பத்திரிகைகளின் சிறப்பு அங்கீகாரத்தைப் பெற்றது. இதனை இயக்கியவர் சந்தோஷ் சிவன். அதே கேரள மண்ணில் இருந்து.

## வானரன்

ஒரு இயக்குநர் - ராஜேஷ் Touch river அவரது முதல் படமே In the name of Buddhu. நாடக அரங்கில் முதல் தன் கால்களைப் பதித்தவர். முப்பதுக்கு மேற்பட்ட நாடகங்களை இயக்கியுள்ளார். பல இந்திய படங்களுக்கு கலை இயக்குநராக கடமையாற்றியுள்ளார்.

புத்தரைப் பற்றி அல்லது அவரது பெயரை தாங்கி பல படங்கள் வெளிவந்துள்ளன. Little Buddha, Buddha Gujjan, Buddha Heads, Chasing Buddha போன்றன சில புத்தர் வன்முறைகள் அற்ற அமைதி வழியை பின்பற்றியவர். வன்முறைகள் பெருகிக்குவியும் இலங்கையில் அதன் பின்னணியில் புத்தகுருமாரின் பங்களிப்பு பெரியளவில் இருந்து வருகின்றது. படத்தின் பெயருக்கும், கருவுக்கும் நிறையவே ஒற்றுமைகள் உண்டு. மேற்குலகில் யோகா, ஆன்மீகம் போன்றன பெருகத் தொடங்கியிருக்கும் இக்கால கட்டத்தில் புத்தரின் காவலர்களின் ஒரு விமர்சனமே இப்படம்.
இப்படம் வெளிப்படையாகவே சில விமர்சனங்களை முன்வைத்துள்ளது.

1. புத்தகுருமாரின் ஆசியுடன் நடைபெறும் இனப் படுகொலைகள்
2. பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள்
3. இந்திய, இலங்கை இராணுவ படைகளின் அட்டூழியங்கள்
4. சிங்களப் பகுதிகளில் பொருளாதார நெருக்கடி - இதனால் தான் பலர் இராணவத்தில் சேர்ந்துள்ளனர். (படத்தில் மருத்துவக்கல்லூரி மாணவன் - பின்னர் இராணுவத்தில் சேருகின்றான்.)

பௌர்ணமி நாளில் ஒரு மரணம் - இதில் கடஜோ அபேவிக்ரமின் மகன் பொருளாதார நெருக்கடியினாலேயே இராணுவத்தில் சேருவதாகக் காட்டப்படுகிறது.

படத்தின் மீதான விமர்சனங்கள்
1. சிறுவர்களை போரில் பயன்படுத்துவது
2. தமிழீழ விடுதலைப் போருக்கு சார்பாக கருத்துக்களை கொண்டுள்ளது.
3. மேற்குலகை கவரும் முகமாக கிறிஸ்தவ தேவாலய அழிப்பு போன்றவை.
4. NGOக்களையும் (அரச சார்பற்ற நிறுவனங்கள்) சமாதானக் குழுக்களையும் கவரும் வகையில், மணிரத்தினத்தின் படங்கள் போன்று இறுதிக் காட்சியில் கதா-நாயகன் சிறுவனை கைகளில் ஏந்தி பேசும் வசனங்கள்.

இங்கிலாந்துக்கு அகதியாக வரும் சிவா தனது கதையை கூறுவதுடன் தொடங்குகிறது. சிவாவை விசாரிக்கும் அதிகாரியின் கண்ணீர்த் துளிகள்வரை நகர்கிறது. இது ஒரு மத்தியதர வர்க்கத்து கதை. அண்மைக்காலங்களில் இலங்கைப் பிரச்சினை பற்றி எழுந்துள்ள சில விமர்சனங்களில் இதுவும் ஒன்று. எமது போராட்டம் மத்தியதர வர்க்க்தினராலேயே எழுப்பப்பட்டது என்பது. ஆனாலும் இப்படத்தில் உலாவும் மனிதர்கள் சாதாரண மனிதர்கள். அவர்களது விடயங்கள், பிரச்சினைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

பல இடங்களில் Unknown Camp எனக் கூறப்படுகிறது. அத்துடன் நேரம் வினாடிகள் வரை கூறப்படுகிறது. உண்மையான விடயங்கள் கூறப்பட்டுள்ளன. எனவே அவ்விடங்களின் பெயர்களையும் குறிப்பிட்டிருக்கலாம். அது படத்துக்கு மேலும் வலுவூட்டியிருக்கும் அமெரிக்காவின் பிரச்சினை போர் பற்றிய படங்களில் இல்லாத இடங்களை கூட தெளிவாக பெரிதாக கூறுவார்கள்.
படத்தில் வரும் சில பாத்திரங்கள் காட்சிகள்
1. மௌனமாக உலாவும் சிறுவன். 'அம்மா' என மரத்தில் எழுதும் அழுத்தமான அந்தச் சிறுவன்.
2. பிள்ளைக்கு பால் ஊட்டும் பொழுது மற்றொரு புலி எனக் கொல்லும் இராணுவத்தை, பின்னர் அவளது மார்புகளை சோதனையிடும் பொழுது வெடித்து சிதறுகின்றனர். அவலத் தாயின் உக்கிரம்.
3. சிங்கள நண்பன் - மனிதாபிமான நண்பன். இராணுவத்தில் சேர்ந்தாலும் மனிதத்தை தேடும் நண்பன். இப்படத்தை நடுநிலைக்கு இட்டுச் செல்லும் அழுத்தமான பாத்திரம்.
4. கதாநாயகியின் தாயின் பிறப்புறுப்பில் வெடிவைத்துக் கொல்லும் இராணுவம். அதனைக் கண்ட நாயகி - அவளது மாற்றங்கள் - முகபாவங்கள் - இயல்பான பாத்திரப் படைப்பு. சோனியா என்ற இந்த நடிகை பல தொலைக்காட்சித் தொடர்களிலும், சில படங்களிலும் நடித்துள்ளார்.
5. கதாநாயகன் மத்திய தரவர்க்கத்து நாயகன். அவ்வப்போது உந்தும் அவரின் மனம், பின்னர் பின் தள்ளப்படும். படத்தின் நகர்வு என்பது இங்கு உலாவும் பாத்திரங்களால் மெருகூட்டப்பட்டுள்ளது. அதேசமயம் ஏனைய இந்தியப் படங்களைப் போல் மொழி என்பது மிகவும் கடினமாகவே உள்ளது. உதவிக்குறிப்புக்களையே பல தடவைகளில் தேட வைத்து விட்டது.

இப்படம் இந்தியாவிலேயே எடுக்கப்பட்டுள்ளதால் முழுமையான ஈழப் பகுதியினை கொண்டும் வரமுடியவில்லை. பச்சை பசேலென நீரோடும் அழகிய காட்சிகளால் அமைந்துள்ளன.

படத்தில் வரும் மனிதர்கள் அவர்களது உளவியல் பார்வைகள், உக்கிரங்கள் என்பன சற்று விரிவாகவே தென்படுவதால் பல இடங்களில் அது படத்திற்கு அழுத்தத்தை கொடுத்துள்ளது.

இப் பாத்திரங்களின் பின்னால், போரினால் திணிக்கப்படும் அரசியல் வாழ்வு, தனிநபர் மீதான கருத்தோட்டங்கள் என்பன இயல்பான வாழ்வியலின் விமரிசையாகவே முன் வைக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் இயக்கத்துக்கும், சமூகத்துக்கு மான தொடர்பு, தலைவரின் பேச்சுக்கள் போன்றன சற்று பிரச்சார வாடையையும் வீசத்தான் செய்கிறது.

இப்படத்தை தயாரித்தவர்களில் ஒருவர் பிரபல கேரள தயாரிப்பாளர் K.S அந்தோனிப்பிள்ளையின் புதல்வரான சாய் ஜோர்ஜ் ஆவார். இவர் இப்படத்தை தயாரித்தமைக்கும் கூறிய காரணம்:

This is one of the windows of the world that we live in and the audiences should go away feeling that violence is wrong.

வன்முறைக்கு எதிராகவும், ஓர் அகதியின் வேர்களையும் தேட முற்படும் இப்படத்தின் இசையமைப்பாளர் ராஜாமணியையும், நெறியாள்கை செய்த ராஜேஷ் Touch river யும் பாராட்ட வேண்டும்.

நிச்சயம் பார்த்திட வேண்டிய படம்.




# MORTGAGES

Five Years closing mortgage rates (அடமானம்) 4.9% on $100,000.00 per month installment comes out $550.00. For different time period closing rates are given below



LOW - LOW RATES AVAILABEL.
TO GET BEST RATE IN TOWN
PL. CALL: ANIL JOSHI

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%
Some conditions may apply





For more information call:
Anil Joshi at
416.888.1072

# ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்



## லலிதா புரூடி

உங்கள் வாழ்வின் பிரச்சனைகள் எப்படி ஆரம்பித்தன, எப்படி இப்பிரச்சனையை சீர்ப்படுத்துவது என்பது இன்றுவரை உங்களுக்குப் புரியாதிருக்கலாம். இன்று உங்களையே ஒரு சுய அலசல் செய்து, செய்த பிழைகளை உணர்ந்து ஏற்று, இன்று என் மனத்திலும் வாழ்விலுமுள்ள பிரச்சனைகளை சரிப்படுத்துவேன், என் வாழ்வை மீண்டும் வளப்படுத்துவேன் என்ற தீர்மானத்தை எடுங்கள். என் வாழ்வுப் பிரச்சனைகளை சீராக்கும் முயற்சியை இன்று முதல் நான் ஆரம்பிக்கின்றேன். என்னால் தான் அதைச் செய்ய முடியும் என்பதை உணர்கின்றேன்.

என் வாழ்வின், என் உலகின் ஒளி நான்தான் என்பதை நான் உணர்ந்ததும் எனது வாழ்க்கை நலம் பெறும். சில சமயங்களில் நீங்கள் எவ்வளவோ கவனமாக, புத்திசாலித்தனமாக உங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பாடுபட்டு உழைத்தும், உங்கள் முயற்சி ஒரு பலனையும் அளிக்காமல் வீண் போவதை வாழ்க்கையில் நீங்கள் ஒவ்வொருவரும் நிச்சயம் சந்தித்திருப்பீர்கள். இதனால் ஏச்சு, பேச்சு, ஏளனம் தான் உங்களுக்கு வரும்போது மனமுடைந்து போக, முதலில் பொல்லாத கோபம் தான் வரும். முதலில் உங்களுடனேயே கோபம். எவ்வளவு முட்டாள் நான் என கோபம் வரும். பின்பு சூழலில் உள்ள சகலருடனும் கோபித்துக் கத்துவீர்கள். நீங்கள் ஏன் கோபப்படுகிறீர்கள் என்பதும் உங்கள் கோபத்தின் காரணமும் மற்றவர்களுக்குப் புரியாது.

கடைசியில் கோபம் அடங்கியதும் குழப்பம் உங்களைச் சூழும். இப்படி நடக்க, நான் என்ன பிழை செய்தேன் என்ற குழப்பம் வரும். உங்கள் உடல், உள்ளம், உணர்வு, உயிரை வாட்டும் குழப்பம். நான் ஒரு முட்டாள். ஒன்றும் தெரியாதவன்.



ஒன்றுக்கும் லாயக் கில்லாதவன் என்ற இந்தக் குழப்பம், சந்தேகம் உங்களை முற்றிலும் ஆட்கொள்ளும் வரை தொடரும். நான் நல்லவனாக வாழ முயற்சிப்பது சரியா என்பதையே சந்தேகிப்பீர்கள். பின்பு மனதில் ஒரு விறைப்பு நிலை ஏற்படும். கோபம், குழப்பம், சந்தேகம், தன் னம்பிக்கையின்மை, தன்னைக்குறைவாக எடை போடுதல் எல்லாவற்றையும் நிறுத்தி மனது விறைத்து விடும். இச்சமயத்தில் இந்தத் தாக்கத்தை தாங்க இயலாது நிச்சயம், "நீங்கள் நான் இனி இப்படி ஒன்றும் செய்யமாட்டேன். சும்மா இருந்தால் இப்படிப்பட்ட தாக்கம், ஏமாற்றம் பிரச்சனை ஒன்றும் வராதல்லவா", என்று அடித்துச் சொல்வீர்கள். அதை நிச்சயம் நம்பவும் செய்வீகள். ஆனால் அதை உண்மையாகச் சொல்வதில்லை. சும்மா உங்கள் மன உளைச்சலில் சொல்கிறீர்கள். ஆமாம் நீங்கள் ஒருபோதும் ஒன்றும் செய்யாமல் சும்மா இருக்கப் போவதில்லை. ஏன் தெரியுமா? உங்கள் வாழ்வின் ஒளி நிச்சயம் நீங்கள் தான்.

நீங்களே ஒளியாயிருக்கும்போது இருட்டைப் பற்றி நீங்கள் எப்படிப் புகார் செய்ய முடியும்? உங்கள் ஒளியினால் உங்களைச் சுற்றிய இருளை அகற்றத்தான் உங்களால் முடியும். எங்கு சென்றாலும் எதைச் செய்தாலும் உங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரத்திற்கு ஒளி வீச வேண்டியது உங்கள் கடமை. ஒளியாகிய உங்களால் அது முடியும். நிச்சயம் உங்களால் ஒளி வீச முடியும். நீங்கள் செய்ய வேண்டியது அதுதான் இருள் இல்லாவிட்டால் ஒளிக்கு வேலையோ அர்த்தமோ இருக்காதல்லவா? இருள் இருப்பது நீங்கள் உங்கள் வேலையை சரியாகச் செய்யவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது என்று நீங்கள் நம்பக் கூடாது. இன்றுவரை ஒளி உங்களைத்தேடி வர வேண்டும். இறைவன் அல்லது குரு போன்ற வேறொருவரிடமிருந்து வரும் ஒளிதான் உங்களைச் சூழ்ந்திருக்கும் இருளை அகற்ற வேண்டும் என்று நீங்கள் நம்பியிருந்திருக்கலாம். இன்னும் நான் மட்டும் தான் இருளை அகற்ற முயல்கிறேன் என்றும் எண்ணலாம். இன்று எதிர்பாராது உன் உள்ளார்ந்த மையத்து ஒளியை உன்னைச் சுற்றிப் பரப்ப ஆரம்பி.

என் கண்களுக்கு உடனடியாகத் தென்படுவதைவிட, இன்னும் எத்தனை எத்தனையோ விஷயங்கள் வாழ்வில் உள்ளன என்பதை நான் உணர்ந்து, அதை மறக்காமல் செயற்பட்டால் எனது வாழ்வு வளம் பெறும்.

உன்னால் செய்ய முடிந்தது, செய்ய முடியாதது யாவற்றையும் உனது புறத்தோற்றம் நிர்ணயிக்க ஒருபோதும் விடாதே. என்னால் சாதிக்க முடியும் என்ற உன் நம்பிக்கையை, நீ கண்ணால் காண்பவை தளர்த்தி அழிக்க விடாதே. இவ்வளவு தான் இதற்கு மேல் வேறொன்றும் இல்லை என்று நீ காண் பவை, உன்னை மயக்கிக் கட்டுப்படுத்த விடாதே. உன்பார்வையின் வெளிப்பரப்பை உனது ஆன்மீகக் கண்ணோட்டம் ஊடுருவி உன்னை உட்புக விட அநுமதி கொடு. ஏனெனில் அங்குதான் எப்போதும் நீ உண்மைகளை அறிந்து கொள்வாய். உன்னை, உன் வாழ்வை உன் சூழலில் உள்ளவர்களை நீ ஆன்மீகப் பார்வை யூடாகக் கணித்தாலன்றி, உன் கண்ணுக்குப் புலப்படும் சீர்கேடுகள், குறைபாடுகள் உன்னை நிச்சயம் குழப்பியடிக்கும். வெளியுலகில் நீ காணும் ஒவ்வொன்றிலும் ஓர் உள்ளார்த்தம் பொதிந்திருக்கின்றது. ஒவ்வொரு சம்பவத்திற்கும் பின்னால், கண்ணுக்குத் தெரியாத ஒரு மறைமுகக் காரணி நிச்சயம் இருக்கும். நம்பிக்கை உள்ளவர்களாக நாம் வாழ வேண்டும் ஏனெனில் நான் முழுமனதுடன் நம்புவதை மீண்டும் உருவாக்க என்னால் முடியும்.


எனக்கு ஒரு மகன் இருந்தால் உலகில் அமைதி நிரம்பியவனாக வாழ அவனுக்குத் தெரிய வேண்டிய அத்தியாவசியமான அனைத்தையும் நான் அவனுக்குச் சொல்லிக் கொடுப்பேன். ஒருவனால் ஒரு தலைவனைப் பின்பற்ற முடியாவிட்டால், அவனால் ஒரு போதும் தலைமை தாங்கி மற்றவர்களுக்கு வழிகாட்டவும் முடியாது என்பதை என் மகனுக்கு உணர்த்துவேன். உடற்திடம், சக்தி, வேகம் போன்றவற்றைப் பார்க்கிலும் பொறுப்பு, தீர்மானம், சகிப்புத்தன்மை, பொறுமை, நம்பிக்கை போன்றவை எவ்வளவோ மேலான சக்தி வாய்ந்தவை. நீ செய்பவை எல்லாவற்றையும் மக்கள் நினைவில் வைத்திருக்காவிடினும், நீ எப்படிச் செயற்படுகிறாய் என்பதை ஒருபோதும் மறக்க மாட்டார்கள். "தாங்கள் முக்கியமானவர்கள், யோக்கியதை யுள்ளவர்கள்", என்று மற்றவர்கள் உணர்ந்து தங்களைப்பற்றி பெருமை பட்டுக் கொள்ளத் தக்க விதத்தில், அவர்களையும் அவர்களினது பங்களிப்பை யும் மதித்து நல்லவிதமாய் அவன் அவர்களுடன் எப்போதும் பழக முயற்சிக்க வேண்டும் என அறிவுறுத்துவேன்.

தக்க தருணங்களில் தரவேண்டிய தகவல்களைத் தராது மறைப்பது பொய் சொல்வதற்கு ஒப்பாகும் என்பதை என் மகனுக்குக் கூறுவேன். நீ முன்வைக்கும் நிபந்தனைகளுடன் வாழ்வைச் சந்திக்க நினைத்தால், உன் கொள்கைகளை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் உனக்கு ஏற்படலாம். உன் வாழ்வில் மலரும் ஒவ்வொரு நாளும் உனக்கு ஒரு ஆசீர்வாதம் உனக்குச் கிடைக்கும் ஆசீர்வாதங்களை நீ எப்படிக் கையாள்கின்றாய் என்பதில் தான், எவ்வளவு அருளை, ஆசீர்வாதத்தை மேன்மேலும் நீ பெறப்போகின்றாய் என்பது தங்கியிருக்கின்றது.

மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் - 905-624-9617


NTE AUTO

New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 12வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair



SIVABALAN

416.750.1573

என். ரி. இ. ஒட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH

ஹோமியோபதி வைத்தியம்

HOMOEOPATHY TREATMENT

பலவருடங்களாக நோயினால் பீடிக்கப்பட்டு மருந்துகள் பாவித்து இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லையா?

கவலையை விடுங்கள்

இலங்கையில் பலவருட அனுபவம் உள்ளவரும் தற்போது கனடாவில் ஹோமியோபதி- அக்கியுபஞ்சரில் சிறப்புப் பெற்றவரும் மிகக்குறுகிய காலத்தில் பல அற்புதமான சிகிச்சைகளைச் செய்து மக்களை வியக்கச் செய்தவருமான

Dr. S. கிறிஸ்ரி MD (MA)

அவர்களை அணுகுங்கள்

சகல சர்மவியாதி அத்துடன் சொராசிஸ் (Psoriasis) இதற்குத் தகுந்த சிகிச்சை அளிக்கப்படும். தொய்வு (Asthma) அலர்ஜி(Allergy), மூக்கடைப்பு, தீராதசளி(Phlegm), மூட்டு வலிகள் (Rheumatism, Arthrities), நாட்பட்ட நோவுகள், மனநோய் (Mental De pression), சக்கரை வியாதி, கொலஸ்ரோல் (Cholesterol), ஆரம்பம். பயப்பட வேண்டாம்.

ஸ்திரி ரோகம் (Female, Male Problems) பெண்களுக்கு அதிக பிரச்சனையாக உள்ள முகப்பரு, சொடுகு, தலைமயிர் உதிர்தல், ஆகியவற்றுக்கு உடன் நிரந்தர தீர்வு காணப்படும்.

பிரச்சனை எதுவானாலும் நிரந்தர தீர்வு காண உடன் தொடர்பு கொள்ளவும்

416-999-1300 (ஸ்காபரோ)

அத்துடன் விஞ்ஞானம் (Science) படித்த இத்துறையில் ஆர்வமுள்ள மாணவிக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, படிப்படியாக வேலை வழங்கப்படும். வாகன வசதியுள்ளவர்கள் விரும்பத்தக்கது.


Niru BRAND®
'நிரு' தயாரிப்புக்கள்'
கனடிய சுகாதார விதிகளுக்கமைய
கனடாவில் தயாரிக்கப்படுகின்றன
No.1
முதல் தரமான
மிளகாய், மல்லி
ஏனைய
சரக்கு வகைகள்
கொண்டு
தயாரிக்கப்படுவதனால்
தரம்
No. 1
Manufacturers & Distributors of
Niru Brand® Products
NIRU ENTERPRISES INC.
76 Howden Road, Scarborough, Ont. M1R 3E4 Canada
Tel: 416-750-1976 Fax: 416-750-8779
E-mail: niru@total.net Web: www.niru.com
Distributors in Europe
Niru (Europe) Ltd.,
16 College Fields Business Centre
Prince George's Road, London SW19 2PT U.K.
Tel:208-640-8228 Fax: 208-640-8423
E-mail: niru@supanet.com
நிரு பிறாண்ட்
வறுத்த மிளகாய்த்தூள்
ROASTED
CURRY (CHILLI) POWDER
POUDRE DE CURRY (ROTIES)
JAFFNA
Hot Curry Powder
POUDRE DE CURRY JAFFNA (PIQUANT)
PRODUCT OF CANADA
450g
Free
Spoon Inside


வீடு விற்க, வாங்க...



ராஜா மகேந்திரன்

**Raja M. Mahendran**, P. Eng.

Broker / Owner



☎: (416) 321-6969 (416) 315-9397

email: raja@mahendran.ca

HOMELIFE/GTA Realty Inc.

1711 McCowan Rd., #206, Toronto, ON M1S 3Y3

## FOR SALE
## SPORT BAR & GRILL

**IN PORT PERRY**

(30 Minutes From Scarborough)

-3000 sq.ft

-Liquor Licensed

-Big Screen TV

-Approx Rent $6,000 Monthly

-Karaoke

-Annual Sale $650 K

-Asking Only $190,000

**$190,000**



**$299,000**

### MORNINGSIDE/LAWRENCE

Detached Home
New paint
4+1 Bedrooms / 2 kitchens
1 Bedroom Basement Apt
Separate entrance
3 Washrooms
Hardwood underneath the carpet



**$149,000**

### DONMILLS/OVERLIA

Don't Miss This
2 Bedrooms / 1 Washroom
Very Good Condition
Brand New Kitchen
New Parquet Floor
Almost All New



**$244,900**

### NEILSON/SHEPPARD

Detached Bungalow
3+2 Bedrooms
2 Full Washrooms
Driveway For 4 Cars



**$214,900**

### NEILSON/SHEPPARD

Semi Detached
4 bedrooms
2 washrooms
All Thermal Windows
Finished Basement
Separate Entrance



**$99,900**

### KENNEDY/EGLINTON

Great Location
Condo Apartment
1 Bedroom
1 Washroom
Large Open Balcony
Parquet Floor Through
All Amenities



**$289,900**

### YOUNG/FINCH

Condo Apartment
Immaculate Condition
2 Bedrooms
2 washrooms



**$419,900**

### MORNINGSIDE/FINCH

New Detached Home
3100 Sq. Feet
4 Bedrooms
4 Washrooms
Walkout Basement
Asking only $419,900

## Only 7 Months New Home

2 Story Detached Home
At
**Neilson/Finch**
3 Bedrooms
3 Washrooms
Built By
Mattamy Of The Best Builders



# அறுவை 7

'ஹலோ'
'வணக்கம் கவிஞரைய்யா!'
'வணக்கம்'
ஒரு திட்டம் போட்டேன் ஐயா எல்லாம் மண்ணாய்ப்போச்சு'
'என்ன திட்டம்'


TCI திட்டம். TCI என்பது Trainee Collegiate Institute என்பதன் சுருக்கம். இப்படி ஒரு கல்லூரியை அமைக்க வேண்டும் என்று திட்டம் போட்டேன். கத்தோலிக்கர் தமது சமயாசார முறைப்படி பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கு தனியாகப் பாடசாலைகள் நடத்துவதுபோல அமெரிக்காவில் யூதர்கள் தனிப்பாடசாலை நடத்துவது போல இங்குள்ள தமிழ்ப் பிள்ளைகளுக்கும் தமிழ்ப்பாடசாலை நடத்தப்படவேண்டும். அரசாங்கப் பாடத்திட்டத்துக்கும் சான்றிதழ் களுக்கும் அமையப் பாடங்களைப் புகட்டுவதோடு தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழர்வரலாறு ஆகிய மூன்று பாடங்களையும் கட்டாய பாடங்களாகப் படிப்பித்தல் வேண்டும்.

## கவிஞர் வி. கந்தவனம்

மாதிரிக்கு நானே ஒரு பாடசாலையை நடத்த நினைத்தேன். நான் மற்றவர் எல்லோரோடும் ஆலோசிக்கவில்லை. பல எலி கூடினால் என்ன நடக்கும் என்று அனுபவரீதியாகவே எனக்குத் தெரியும். எனது திட்டத்தை எழுத்திற் போட்டேன். காலத்தை வீணாக்காமற் கல்வி அமைச்சரைச் சென்று கண்டேன். அவர் தமிழ்க் கல்லூரியின் தேவையை வலியுறுத்தி விரிவான ஒரு அறிக்கை சமர்ப்பிக்கும்படி கூறினார். எனது கோவையில் ஏற்கனவே தயாராக இருந்த அறிக்கையை அவரிடம் கையளித்தேன். அவர் அதனைப் படித்துவிட்டு ஒரு மாதத்தற்குள் அனுமதிக் கடிதத்தை அனுப்புவதாகவும் பாடசாலை அமைக்கும் பணியை நான் தொடரலாம் என்றும் கூறினார். வெற்றிப் பெருமித்தோடு வீடு திரும்பினேன்.

'அடுத்த நாளே நிதி திரட்டும் பணியில் இறங்கினேன். வர்த்தகப் பெருமக்கள் வாரி வாரி வழங்கினார்கள். சொன்னால் நம்ப மாட்டீர்கள். ஒரே நாளில் பத்துக் கோடி சேர்ந்தது. வங்கியில் பள்ளிக்கூடத்தின் பேரில் கணக்கொன்றை திறந்தேன்.

'கட்டிடத்துக்கு அத்திவாராம் போட்ட அன்றே தமிழ்க் கல்லூரித் திட்டத்தை



அறிவித்துத் தமிழ் மாணவர்களிடம் விண்ணப்பங்கள் கோரி ஆங்கிலம், தமிழ்ப் பத்திரிகைகளிலெல்லாம் விளம்பரங்கள் கொடுத்தேன்'.

'கட்டிடமும் முடிந்து விட்டது. திறப்பு விழாவிற்கு திகதி குறித்தாயிற்று. ஆனால் தமிழ்மாணவர்கள் எவரும் தமிழ்க் கல்லூரியிற் சேர்வதற்கு விண்ணப்பிக்க வில்லை. எனது திட்டம் எல்லாம் வீணா? ஐயகோ, ஐயகோ என்று குளறி அழுதேன்.

அந்த நேரம் பார்த்து எனது அடிசிற் கினியாள் அடியைத் தொட்டுக் கும்பிடாது முடியைப் பிடித்து உலுப்போ, உலுப்பென்று உலுப்பி என்னை எழுப்பினாள். கண் களைத் திறந்தபோது கன்னத்தைத் தடவி ஏனப்பா நடுச் சாமத்தில் ஒப்பாரி வைக்கிறியள் என்று கேட்டாள். எப்படி ஐயா கனவு?

'நல்ல கனவு. உம்மைப்போல் பலரும் காணும் கனவு. விரைவில் நனவாகப் போகின்றது?'
'என்னையா சொல்லுறியள்?'
கல்வியோடு தொடர்புடைய இரு அமைப்புக் கள் இரு தமிழ்க் கல்லூரிகளை அமைக்கத் திட்டமிட்டுள்ளன. சரி வேறு யாரோ அழைக்கிறார்கள் போலத் தெரிகிறது.'
வணக்கம்

பத்து இலட்சம் பொன்னும் கேட்டாள்
சத்தியமும் வாங்கிப் போட்டாள் -
சகோதரரே
தாசிகள் நேசம் மோசமே - தொலை
பேசிகள் நேசம் வாழ்கவே!



# குறிக்கோள்

*ஒரு குறிக்கோளை அடைவதில் தளராத உற்சாகம் இருக்குமானால் அது எவ்வளவு பெரிய விசயமானாலும் அவனால் சாதித்துவிட முடியும்.

*காட்டு முயலை குறி தப்பாமல் வீழ்த்திய அம்பை கையில் ஏந்துவதைவிட, யானை மேல் பட்டுத் தவறிய வேலை ஏந்துதல் மிகச் சிறந்ததாகும். எய்ய முடியாவிட்டாலும் குறிக்கோள் உயர்ந்ததாகவே இருக்கட்டும்.

*தன் இலக்கைச் சரியாகத் தெரிந்து கொண்டு அதை நோக்கி விடா முயற்சியுடன் செல்பவனே வெற்றியடைகிறான்.

*இலக்கை நோக்கிய பயணங்களின்போது இடையூறுகளைப் பொருட்படுத்தாதீர்கள்.

*வாழ்க்கையில் ஒவ்வொருவரும் தனக்கென்று ஒரு குறிக்கோளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அந்தக் குறிக்கோளை அடைவதுதான் அவர்கள் தேடும் செல்வமாக இருக்க வேண்டும். அந்தக் குறிக்கோளை அடைவதற்கான சக்தி அனைத்தும் அவர்களுடைய மனத்திற்குள்ளேயே மறைந்து கிடக்கிறது.

*எழுந்திரு, விழித்திரு,
குறிக்கோளை அடையும் வரை ஓயாமல் உழைத்திரு.

*செயலை விதையுங்கள்; குணம் உண்டாகும். குணத்தை விதையுங்கள்; உங்கள் எதிர்காலம் உருவாகும்.

*எவரும் உன்னைக் கேளாதபோது பதில் சொல்லாதே. இருவர் பேசிக் கொண்டிருக்கையில் இடையில் புகுந்து எதுவும் சொல்லாதே. ஒருவரைப்பற்றி இன்னொருவரிடம் குறைவாக எதுவும் சொல்லாதே. கபடமாகவும், பொய்யாகவும் புனைந்து எவரிடமும் பேசாதே.

*மற்றவர்கள் உமக்கு எதைச் செய்யக்கூடாது எனக் கருதுகிறீர்களோ, அதை மற்றவர்களுக்கு நீங்களும் செய்யாதிருத்தல் வேண்டும்.

*நம்முடைய செல்வத்தை இழந்தால் ஒன்றும் நஷ்டமில்லை; நம்முடைய சுகாதாரத்தை இழந்தால் சிலவற்றை இழந்தவர்கள் ஆவோம்.
நம்முடைய ஒழுக்கத்தை இழந்தால் எல்லாவற்றையும் இழந்தவர்களாவோம்.

*உள்ளத்தைக் கொண்டு மன நிறைவு அடைவதால் உடல் நலம் ஏற்படுகிறது.

*எண்ணங்கள் குறிக்கோள்களை நோக்கிச் செல்கின்றன. குறிக்கோள்கள் செயலை நோக்கியும், செயல்கள் பழக்கங்களை நோக்கியும் உருவாகின்றன. பழக்கங்கள் குணத்தைத் தீர்மானிக்கின்றன.

*நல்ல குணத்தால் துயரங்கள் அழிகின்றன, தவறான நடத்தையால் பெருஞ்செல்வமும் அழிந்து விடும்.






### திருக்குறள்



**276. நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து**
**வாழ்வாரின் வன்கணா ரில்.**
உண்மையிலேயே மனதாரப் பற்றுகளைத் துறக்காமல் துறந்தவரைப் போல் வாழ்கின்ற வஞ்சகர்களைவிட இரக்க மற்றவர் யாருமில்லை.

**277. புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி**
**மூக்கிற் கரியா ருடைத்து.**
வெளித் தோற்றத்துக்குக் குன்றிமணி போல் சிவப்பாக இருந்தாலும், குன்றிமணியின் முனைபோலக் கறுத்த மனம் படைத்தவர்களும் உலகில் உண்டு.

**278. மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி மறைந்தொழுகு மாந்தர் பலர்.**
நீருக்குள் மூழ்கியோர் தம்மை மறைத்துக் கொள்வது போல, மாண்புடையோர் எனும் பெயருக்குள் தம்மை மறைத்துக்கொண்டு மனத்தில் மாசுடையோர் பலர் உலவுகின்றனர்.

**279. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன**
**வினைபடு பாலாற் கொளல்.**
நேராகத் தோன்றும் அம்பு, கொலைச் செயல் புரியும். வளைந்து தோன்றும் யாழ், இசை இன்பம் பயக்கும். அது போலவே மக்களின் பண்புகளையும் அவர்களது செயலால் மட்டுமே உணர்ந்து கொள்ள வேண்டும்.

**280. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்த தொழித்து விடின்.**
உலகத்தாரின் பழிப்புக்கு உள்ளாகும் செயல்களைத் துறக்காமல் ஒரு துறவி, தனது தலையை மொட்டையடித்துக் கொண்டோ, சடாமுடி வளர்த்துக் கொண்டோ கோலத்தை மட்டும் மாற்றிக் கொள்வது ஒரு ஏமாற்று வித்தையே ஆகும்.

**281. எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்தொன்றுங்**
**கள்ளாமை காக்கதன் நெஞ்சு.**
எந்தப் பொருளையும் களவாடும் நினைவு தன் நெஞ்சை அணுகாமல் பார்த்துக் (காத்துக்) கொள்பவனே இகழ்ச்சிக்கு ஆட்படாமல் வாழமுடியும்.

# முரசொலிமாறன் காலமானார்



மத்திய அமைச்சர் முரசொலிமாறன் சென்னையில் உள்ள மருத்துவமனையில் (24-11-2003) அன்று காலமானார். மக்கள் அஞ்சலிக்காக இவரின் உடல் கலைஞர் கருணாநிதியின் இல்லத்தில் வைக்கப் பட்டிருந்தது. கடந்த ஒரு ஆண்டு காலமாக உடல் நலம் குன்றியிருந்த மாறன் அமெரிக்காவிலும் பின்னர் சென்னையிலும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். தி.மு.கழகத்தின் மூளை என்று கருணாநிதியால் வர்ணிக்கப்பட்ட இவர் சென்னை தொகுதியில் இருந்து பலமுறை (தொடர்ந்து 6 தடவைகள்) தேர்ந் தெடுக்கப்பட்டு V.P சிங், தேவகௌடா, வாஜ்பாயின் அமைச்சரவைகளில் முக்கிய அமைச்சராகப் பணியாற்றியவர். முர சொலி, மற்றும் முத்தாரம் பத்திரிகை களுக்கு ஆசிரியராக இருந்த இவர் பல திரைப்படங்களுக்கு கதைவசனம் எழுதி இயக்கியும் இருந்தார். மக்கள் திலகம் MGR இன் "எங்கள் தங்கம்" இவரின் சொந்தத் தயாரிப்புகளில் ஒன்றாகும். மேலும் SUV TV இன் உரிமையாளரும் இவரே.

கருணாநிதியின் சொந்த அக்காள் மகனான இவருக்கு இரண்டு மகன்களும் ஒருமகளும் உண்டு. இறக்கும் பொழுது இவரின் வயது 69.

முரசொலிமாறனின் மரணச்செய்தி அறிந்ததும் தி.மு.க. பொதுச்செயலாளர் அன்பழகன், துணைப்பொதுச்செயலாளர் ஸ்டாலின், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் மற்றும் RM வீரப்பன், ரஜினி, விஜயகாந்த், சரத்குமார், நெப்போலியன், பிரவு, ஜூனியர் சிவாஜி, AVM சரவணன், மற்றும் பலர் மருத்துமனைக்குச் சென்று கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

மத்திய மந்திரி என்பதால் இவரின் உடல் இராணுவ மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டது. அவரின் உடல் தேசியக் கொடியால் போர்த்தப்பட்டிருந்தது. இராணுவ வாகனம் புறப்பட்டது. கருணாநிதி வேறு ஒரு

பரம்

வாகனத்தில் புறப்பட்டுச் சென்றார். இவரைக் கைத்தாங்கலாக வை.கோ அவர்களும் பொன்முடி அவர்களும் அழைத்துச் சென்று கோலில் உட்காரவைத்தனர்.

பெசன்ட் நகரிலுள்ள சுடுகாட்டிற்கு மாலை 6.20க்கு இராணுவ வண்டி வந்தடைந்தது. சகல இராணுவ மரியாதைகளும் செய்யப்பட்டன. சோக கீதம் இசைக்கப்பட்டது. குண்டுகள் முழக்கமிட்டன.

ஜோர்ஜ் பெர்னாண்டாஸ், வாஜ்பாய், முன்னாள் பிரதமர் ஐ.கே. குஜ்ரால் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் மலர்வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர். அதன் பிறகு உடல்களை எரிக்கப்படும் மின்சார தகன மேடைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தகனம் செய்யப்பட்டது.


## DO YOU LIKE TO EARN EXTRA MONEY

Is the income from your job enough for your needs? If not, I can show you how to make extra monthly income of $300 to $2,000 per month in one-year period at your spare time. நீங்கள் செய்யும் வேலையினால் கடைக்கும் வருமானம் போதுமானதா? இல்லை என்றால் கீழ் கண்ட தொலைபேசி இலக்கத்துடன் பி.ப. 4:30 மணிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளவும். மாதாந்தம் $300 - $2,000 வரை உழைக்கக் கூடிய முறையை இலவசமாக கற்றுக்கொடுக்க முடியும். வேண்டிய தொலைபேசி இலக்கம்:



416-802-2408

416-725-3067

If you are seriously interested please call @905-795-5522 afer 4:30 pm for an appointment.

***Nothing will be explained over the phone please.***



## CLEANING

• வீட்டு CARPET கழுவுதல் • CAR சம்போ Cleaning

அழையுங்கள் நேசன் - 416 - 332 - 1463

Cell - 416-716-0629

## வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

FIREMAN LOFRANCO
PERSONEL INJURY LAWYERS

அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்



Over 100 Years Combined Experience
Personal Injury Lawyers

*IF YOU HAVE OPTIONAL INSURANCE YOU CAN CLAIM UP TO **$1,000.00** IRB'S PER WEEK வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்

SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A MOTOR VEHICLE ACCIDENT

• FRACTURES • SPINAL CORD INJURY • BRAIN OR HEAD INJURY • SCARRING OR DISFIGUREMENT • INTERNAL INJURIES OR DEATH

**உங்களுக்குத் தெரியுமா?**

நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி, சம்பள இழப்பீடுகள் அத்துடன் **$172,000.00** வரை இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

நடந்த விபத்து உங்கள் தவறாகவிருப்பின் உங்களால் **$172,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

5255 YONGE ST, SUITE 1300, TORONTO - MISSISSAUGA - KITCHENER

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

**தீபன் - (416) 505-9804**
24 Hours Direct Line



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

**Answers to Tutorial 135** November 15, 03

Ans. 1. 16 gallons = $2/3 - 1/2 = 1/6$ of the tank.
Capacity of tank = $6 \times 6 = 96$ gallons.

Ans. 2. New Seconds = $10 \times 100 \times 100$ Ordinary sec. = $24 \times 60 \times 60$
New Sec/Or. Sec. = $10 \times 100 \times 100 / 24 \times 60 \times 60 = 125 / 108$

Ans. 3.
$$\frac{30 \times 60/100 + 70 \times 20/100}{100} \times 100 = 32\%$$

Ans. 4. $a = (2, 3, -7)$, $b = (-4, y, 14)$ It is collinear if
$2/-4 = 3/y = -7/14$ $\therefore y = -6$
It is perpendicular $a.b = 0$ $\therefore -8 + 3y - 98 = 0$ $\therefore y = 106/3$

Ans. 5. $U = a + b\,w$ $(-3, 1) = a(1,-2) + h(-1, 7)$
$a - b = -3$ $-2a + 7b = 1$
$a - b = 3$ ---------(1)
$-2a + 7b = 1$ -------- (2)
Solving $a = -4$, $b = -1$ vec u = -4vec v - vec w

## Tutorial - 135

1. Evaluate (Find the values of)
$1 \times 2 - 2 \times 2 + 3 \times 2) - 4 \times 2 .....-100 \times 2$. [Gr. 6 - 8]

2. For how many whole numbers between 0 and 1000 does the sum of the digits equal 9. [Gr. 8 - 9]

3. find the exact value of the difference
$(5555555555)^2 - (444444\ 4445)^2$ [Gr. 9- 10]

4. Given vector w = 2a-0b-5c as unique (lc) in space, determine if the following are coplanar or non coplanar (a) w,a,b (b) w,b,c (c)a,b,c

5. Express the vectors v = (-1,, 1, 2) as [lc] of a = (1, -1, 1), b = (1, 3, 1) and c = (2, -1, 1) Describe the set v, a, b, c with respect to coplanarity using only result from above.

*BY. MR. S.F.XAVIER (Teacher)* *TEL: 416-431-6774*





## TUITION

MCLEVIN & SEWELLS பகுதியில் Grade 3 to Grade 5 வரையும், Math, English, Science, French பாடங்களும் Grade 6 to Grade 10 வரையும் Math, Science பாடங்களும் கற்பிக்கப்படும். தொடர்புகளுக்கு:
**416-299-5083 / 416-283-5265**

## TUITION



Grade 6 to 10 - Mathematics & Science
Grade 11 to 12 & College
Mathematics (Calculus / Geometry Algebra / Data Manage, etc) & Physics.
Computer Classes ( In English & Tamil) for Adults & Kids
Ms Office, Internet applications, Programming, Database & AutoCAD... etc.
Contact: "Suresh" : MSc qualified & experienced Tutor "Homework Help" Quiz" Practice Tests" One-to-One guidance "Tips for scoring marks
Residence: 416-615-2258 Cell: **416-732-8021**



## TUITION


உங்கள் பிள்ளைகளின் எதிர்கால நல்வாழ்விற்கு இன்றே

Math, Chemistry, Physics, Accounting, Calculus, Algebra/ Geometry, Finite

Teachers:
**S. Sivakumar**, M.Sc (Canada), M.C.S.E., A+
**S. Sivakumaran**, B.Sc (Hon), Dip-in Ed., MA (UK)
**S. Vinotha**, C.G.A

**அத்திவாரமிடுங்கள்!!**
**From Grade 5 to University**
**College:** Calculus, Linear Algebra & Geometry, Accounting
University: Calculus I & II, Fundamental Mathematics
தொடர்புகளிற்கு: **Kumar -(416)282-1421 / (416) 335-5595 / (416) 835-5806** **Kennedy & Ellesmere, Morningside & Ellesmere**

## TUITION



- Chemistry
- > Gr. 11
- Gr. 13
- Algebra & Calculus
- > Gr.13
- Physics
- Finite
- > Gr. 13
- Maths New Curriculum for Grade 12 Geometry & Discrete Mathemetices, Universict preparation இவற்றுடன் OAC பாடங்கள்.

கனேடிய கல்வி அனுபவம் பெற்றவரால் நடத்தப்படுகிறது. **NEILSON / MCLEVIN**
PL. CALL: Mr. & Mrs. Sharma, (416) **724-8336**



## TUITION

அனுபவம் வாய்ந்த தரமான முதுகலை (M.A.) பட்டதாரி ஆசிரியையினால் KINDER-GARDEN இலிருந்து Grade 6 வரையிலான பிள்ளைகளுக்கு பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படும்.
**PL. CALL: 264-9471**

## ENGLISH & MATH TUITION

